திராவிடநாடு

மலர் 14 | விலை 2 அணா | இதழ் 5

தவசிகள் காதை

[கிராமீணன்]

☆

"இன்னும் ஒரு ஐந்து நிமிட நேரம்-நீங்கள் கண்ணைத் திறக்கா திருந்திருந்தால், நான் தேவலோகம் போய்விட்டிருப்பேன்" என்ருள் மேனகா.

"அப்படியா? நான் யோகத்துக்காகக் கண்களை மூடுவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்பு, நீ வந்திருந்தால்......என்ன செய்திருப்பேன் தெரியுமா......" என்று தழதழத்த குரலில் பேசினுர் விசுவாமித்திரர் கலைந்துபோயிருந்த ஜடையைச் சரிப்படுத்திவிட்டபடி.

"என்ன செய்திருப்பீர்?" என்று கேட்டாள் மேனகா. அந்தத் தேவ
மாதின் கண்களிலே கூத்தாடிய குறும்பு. முனிவரை வெகுபாடு படுத்
திற்று—எனினும் சமாளித்துக்கொண்டு அவர் சொன்னுர்.
"இவ்வளவு காலத்தையும் வீணுக்கி இருந்திருக்க
மாட்டேனே......"
"ஐய்ய......" என்று கேலி செய்தாள் தேவமாது......
"அன்பே"......என்று அவர் குழைந்தார்.
"தொல்லைக்கு ஒரு எல்லையே கிடையாதா?" என்ருள் நாட்டிய
மாடி முனிவரைத் தன் வசப்படுத்திக்கொண்ட நாரீமணி.
"ப்ரியே? நான் நெருப்பிலே நின்று தவம் செய்திருக்கிறேன்—
நெருப்பு என்னைச் சுட்டதில்லை!! ஊசி முனையில் நின்றிருக்கிறேன்,
வலியே கிடையாது! நீரில் மூழ்கியபடி தவம் செய்திருக்கிறேன்— ஒரு
ஆபத்தும் நேரிட்டதில்லை, ஆனுல் ஆரணங்கே! உன் விற்புருவம்,
கயல்விழி...ஆஹா...என்னைப் படுத்துமபாடு....." என்று கொஞ்சினுர்
வஞ்சி மெள்ள அந்த இடத்தைவிட்டு நழுவினுள், அவர் விடுவேனு'
என்ருர், அவள்தொடவேண்டாம் என்ருள்; அவர்கரம் பிடித்தார்,'
அவள் துள்ளி ஓடினுள்; தூயவர் அவளைத் துரத்திக்கொண்டோடினுர்,
மலர்கள் கசங்கின, மாங்கனிகள் உதிர்ந்தன, மான்கள் மிரண்டோடின
மணிப்புருக்கள் பயந்து சிறகடித்தன, மலைப்பாம்புகள் பிலம் புகுந்தன,
அன்னப்பட்சிகள் வெட்கித் தண்ணீருக்குள் தலையைக் கவிழ்த்துக்
கொண்டன, அடியேனும் வெட்கம் காரணமாக, என் கண்களை வேறு
திசையில் செலுத்தினேன்—எனவேதான் இந்தமட்டோடு இப்புண்ய
காதையை நிறுத்திவைக்க நேரிடுகிறது. பொறுத்தருள்க.

ஆஸ்திகமும் கொசுக்களும்!

சென்னைகார்ப்பரேஷன் இப்படிஒரு 'நாஸ்தீகச்' செயலில் ஈடுபடும் என்று யார் எதிர்பார்த்திருக்கமுடியும். நல்ல வேளையாகச் சர்க்கார் குறுக்கிட்டது, இல்லையானால் நாஸ்திகம் வெற்றி பெற்று விட்டிருக்கும்...

சென்னை திருமயிலை கபாலீஸ்வரர் கோயில்குளம், துர்நாற்றமடிக்கிறது, கொசுக்கள் உற்பத்திக்குக்காரணமாக இருக்கிறது என்று காரணம் காட்டி, அந்தக் குளத்திலே உள்ள தாமரைக் கொடிகளைக் களைந்தெறிந்து விடவேண்டும் என்றும், கொசு முட்டைகளை அழிப்பதற்காக அந்தக் குளத்திலே வளர விடப்பட்டிருக்கும் மீன்களைத் தின்றுவிடும் பெரிய மீன்களை வெளியே எடுத்துவிட வேண்டுமென்றும், சென்னை கார்ப்பரேஷன் மயிலைக்கோயில் நிர்வாகத்துக்கு ஒரு நோட்டீஸ் விடுத்தது. கோயில் நிர்வாகம், இந்துமத பரிபாலன போர்டாரிடம் அபயம் கோரிற்று, போர்டார் சர்க்காருக்கு மனுச்செய்தனர், சர்க்கார் இப்போதைக்குத் திருக்குளத்தைச் சுத்தம் செய்யும் திட்டத்தை நிறுத்திவைக்கவும்—மேற்கொண்டு நடவடிக்கை வேண்டாம் என்று கார்ப்பரேஷனுக்குக் கட்டளை பிறப்பித்து 'நாஸ்திக'த்தை நசுக்கி விட்டது!!

"தாமரையைக் களைந்துவிடுவதா! தாமரைப்பூ சாமான்யமானதா! இலட்சுமிதேவி வீற்றிருக்கும் மலரல்லவா, தாமரை! மேலும் தாமரை மலர் பூஜைக்கு உபயோகமாகிறதே! இதை உணராமல் தாமரைக் கொடியை அப்புறப்படுத்தச் சொல்லி உத்தரவிடலாமா, அபசாரம்! அபசாரம்! ஏன் இப்படிப்பட்ட நாஸ்திகப்புத்தி உதித்தது கார்ப்பரேஷன் அதிகாரிக்கு" என்று கபாலி ஆலய குருக்கள்மார், கொதிப்புடன் பேசியிருக்கக்கூடும். தாமரை பூஜைக்குப் பயன்படுவதையும், மிச்சமிருப்பது விற்பனை செய்யப்பட்டு ஆண்டுதோறும் 3000 ரூபாய் வருமானம் வருவதையும் காரணம் காட்டினர் போர்டார். கொசு பரவுகிறது, மலேரியா பரவுகிறது என்கிறது கார்ப்பரேஷன்—பக்திமணம் பரவும்போது, மலேரியா வாடையும் அடித்தால் என்ன, பரவாயில்லை என்று பக்தர்கள் எண்ணுகிறார்கள் போலும். சிறுமீன்களைக் கொத்தித் தின்றுவிடும் கொடிய மீன்களை அப்புறப்படுத்துவதற்கு யாரும் வெளிப்படையாக எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை—ஒரு சிலருக்கு உள்ளூர இதுகூடப் பிடிக்காது—விதவையரின் இன்பப் பெருக்குச் சிறு மதலையாகி விடும்போது, திருக்குளமல்லவா இரட்சிக்கிறது-மீன்கள் கொத்தித்தின்று விடுவதால், எத்தனையோ 'மானக்கேடு' வெளியே வராமலிருக்குமே—ஏன் இந்தச் சூட்சமும் புரியவில்லை என்று ஒரு சிலர் எண்ணிடக்கூடும்! எப்படியோ ஒன்று ஆஸ்திகம் வெற்றிபெற்றுவிட்டது; கொசு இனம் கூடி ஆஸ்திகத்தை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறது, இரட்சித்த பெரியவர்களே வாழி!—என்று!!

திரட்டு

சச்சார் சங்கடம்

வெற்றி! வெற்றி! சர்க்கார் பணிந்தது! சத்தியம் வெற்றிபெற்றது! என்று சங்கநாதம் செய்துகொண்டு, கிளர்ச்சி நடத்தி வெற்றி கண்ட அகாலிகள் ஊர்வலம் நடத்துகின்றனர், பஞ்சாபில். பத்தாயிரம் அறப்போர் வீரர்கள் சிறைக்கோட்டம் புகுந்தனர்; பஞ்சாப் முதலமைச்சர் சச்சார் தடியடி போதாதென்று துப்பாக்கிப் பிரயோகமும் நடத்திப் பார்த்தார்; கிளர்ச்சி அடங்கவில்லை, அடக்குமுறை வலுக்க வலுக்க கொழுந்துவிட்டெரிந்தது; கடைசியில் கிளர்ச்சிக்குக் காரணமாக இருந்த தடை உத்தரவை ரத்து செய்தார். கிளர்ச்சி நடத்தினோர், தங்கள் கோரிக்கை வெற்றிபெற்றதால், கிளர்ச்சியை நிறுத்திக்கொண்டனர். வெற்றி விழா நடைபெறுகிறது. அகாலியரின் கிளர்ச்சியை எதிர்த்தவர்கள், இந்த வெற்றி விழாக்கண்டு மனம் வெதும்பிப் போயுள்ளனர். சச்சார் சரணாகதி அடைந்துவிட்டார் என்று அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். அவர்கள் இப்போது சரணாகதி மந்திரிசபை ஒழிக! சச்சார் ஆதிக்கம் ஒழிக! என்று கண்டனம் கிளப்பியுள்ளனர்! காங்கிரஸ் கட்சியிலே இந்தப் பிரச்சினை சம்பந்தமாகக் குழப்பமும் குரோதமும் கிளம்பி, சச்சாருக்குச் சீட்டுக்கிழிக்க வேண்டும் என்ற அளவுக்குச் சென்றுவிட்டிருக்கிறது. மேலிடம் நாற்றம் வெளியே அடிக்காதபடி 'மூடி'விட முயற்சிக்கிறது. காங்கிரஸ் தலைவர் தேபர் தலையிட்டார்; ஆனால் பஞ்சாப் காங்கிரஸ் கட்சியில் ஒரு பிரிவினர் தேபரின் கட்டுத் திட்டத்துக்கும் அடங்க மறுத்துவிட்டனர் — சச்சார்பாடு திண்டாட்டமாகிவிட்டிருக்கிறது.

நேரு-ஆசிரியராகிறார்!

நேரு பண்டிதர், ஒரு விநாடி, ஆசிரியர் வேலை பார்த்தார் லோகசபாவில்—உச்சரிப்பு சொல்லிக் கொடுத்தார்—கம்யூனிஸ்டுகளுக்கு. தென் வியட்நாம் முதல்வர்பற்றிக் குறிப்பிடுகையில், கம்யூனிஸ்ட் கட்சியினரான, புரபசர் ஹிரென் முகர்ஜியும், ரேணு சக்கரவர்த்தியும், டியம் என்று அவர் பெயரைக் கூறினர். நேருபண்டிதர் குறுக்கிட்டு, அவர் பெயர் உச்சரிக்கப்படவேண்டிய முறை இதுவல்ல, 'ஜெம்' என்று உச்சரிக்கவேண்டும்-எழுத்து-டியம் என்று இருக்கிறது என்றாலும், உச்சரிப்பு ஜெம் — அதுதான் சரியானமுறை என்று கூறித் திருத்தினார்.

பிரிட்டிஷ் ஆட்சி இங்கு இருந்தபோது, இந்தியாவுக்கும்—கனடாவுக்கும் ஒரு வியாபார ஒப்பந்த ஏற்பாடு நடைபெற்றது; இதற்குக் காரணஸ்தராக இருந்தவர் என்பதற்காக சர். சண்முகம் அவர்களைக் காங்கிரஸ் தலைவர்கள் — ஆச்சாரியார் உட்பட பலமாகக் கண்டித்தனர். அந்த வியாபார ஒப்பந்தம் இந்தியாவுக்குப் பாதகமானது என்று ஏதேதோ புள்ளி விவரங்களெல்லாம் கொட்டிக் காட்டினர். தேர்தல் சமயம்! ஆகவே தூற்றல் பெருமழைபோலிருந்தது. சர். சண்முகம், அப்போது, சென்னை விக்டோரியா மண்டபத்தில் சொற்பெருக்காற்றும்போது, நேரு பண்டிதர் இப்போது லோக் சபையில், ஆசிரியரானாரே அதுபோலானார்!

"நண்பர்களே! என் முயற்சியால் நடைபெற்றதாகக் கூறிக் கண்டிக்கப்படும் இந்தியா—கனடா வியாபார ஒப்பந்தம் குறித்து, மதிப்புக்குரிய காங்கிரஸ் தலைவர்கள் கொண்டிருக்கிற கருத்துகள் யாவும் தவறு, பேசுகிற கண்டனம் தவறானவை, அவர்களுடைய உச்சரிப்பே தவறானது, வியாபார ஒப்பந்தம் நடைபெற்ற இடம் ஆட்டவா, ஒட்டவா அல்ல!" என்றார். மன்றத்தினர், கையொலி கிளப்பி மகிழ்ந்தனர். காங்கிரஸ் தலைவர்கள் அன்றுவரை, ஒட்டவா ஒப்பந்தம் என்றுதான் கூறிவந்தனர்—ஒட்டவா அல்ல, ஆட்டவா என்று ஆசிரியர் போலக் கூறினார் காலஞ்சென்ற சர். சண்முகம். அதுபோலிருக்கிறது, நேரு பண்டிதர், 'டியம் அல்ல, ஜெம் என்று திருத்தம் கூறியது!!

(15-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

காஞ்சி] 7—8—55 [ஞாயிறு

சிந்தனையைக் கிளறும்

—o—

"கிராமங்களுக்குச் சென்று சேவை புரியுங்கள்.

ஊதியத்தைப் பெரிதாகக் கருதாதீர்கள்-சேவா உணர்ச்சிவேண்டும்.

நீங்கள் பெற்றுள்ள கல்வி, வெறும் வயிற்றுப்பிழைப்புக்காக அல்ல, தொண்டாற்ற—அந்தத் தொண்டும் கிராம மக்களிடைதான் செய்தல் வேண்டும்.

எனவே, கிராமம் செல்லுங்கள்—இந்தியாவின் ஜீவநாடி கிராமம், முதுகெலும்பு கிராமமக்கள், **100**க்கு **80**பேர் கிராமங்களில்தான் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு உங்கள் அறிவும் ஆற்றலும் பயன்படட்டும்."

பேசி முடித்ததும், அவர் குளிர்ந்தபானம் பருகுகிறார்; கேட்டிருந்தோர் சூடேறும் வண்ணம் கை தட்டுகிறார்கள்—நகரமன்ற மண்டபம் கொள்ளாத அளவு பெருங்கூட்டம். அதை விலக்கிக்கொண்டு, பேச்சாளர் தன் மோட்டாருக்குச் செல்வதே சிரமமாக இருக்கிறது, மோட்டார்புறப்படுகிறது — அலங்கார விளக்குகள் நிரம்பிய வீதிகள், அழகாக விளங்கும் அங்காடி, பகட்டுடன் காட்சிதரும் படக்காட்சிக் கொட்டகைகள் இவைகளைக் கடந்து, நகரின் புதிய பகுதியில் உள்ள நாலு ஏகர் விஸ்தீரணமுள்ள பங்களா சென்றடைகிறது—அப்பா! டாடி! என்ற செல்லப் பேச்சை அடக்கி விடும் வகையில் அவருடைய அல்சேஷியன் குரைத்து வரவேற்கிறது, வேலையாள் ஓடோடிச் சென்று ரோஜாமாலையை எடுத்துவருகிறான், அவர் ஓர் அருமையான பணியாற்றி விட்டதாக எண்ணி அகமகிழ்கிறார். ஆனால், அவர் உரையைக் கேட்டுக் கொண்டிருந்த மாணவர்கள்?

ஆமாம்! நிச்சயமாகக் கிராமத்துக்குத்தான் சேவை செய்யப் போக வேண்டும்.

என்பதுபற்றி அல்ல, பேசிக்கொள்வது—அவருடைய நடை உடை பாவனை, ஆங்கிலத்தில் காணப்பட்ட மெருகு, ஆக்ஸ்போர்டு அதற்குக்காரணம் என்ற விளக்கம், ஆயிரமா இரண்டா என்ற அவருடைய சம்பளம் பற்றிய ஆராய்ச்சி—இவைபற்றிப் பேசுகிறார்கள்; கிராமம் எப்போதும் போல இருந்து வருகிறது; கிராமம் சென்று சேவை செய்க! என்ற நல்லுரை வழங்காத நகரப்பிரமுகர் இல்லை, அந்தப் பேச்சு எழாத மன்றமில்லை; நடைமுறைக்கு அது வரவே இல்லை!! ஏன்?

மேற்கு வங்க முதலமைச்சர் பி. சி. ராய், சற்று வெள்ளையாக இது குறித்துப் பேசியிருக்கிறார்—மகிழ்கிறோம்.

அவரும், மாணவர்களை, குறிப்பாக மருத்துவப் படிப்புப் பெற்ற மாணவர்களைக் கிராமங்களுக்குச் சென்று 'சேவை' புரியத்தான் சொல்கிறார்; ஆனால் ஏன் அந்த நல்லுரை ஏற்றுக் கொள்ளப்படாமலிருக்கிறது என்பதை உணர்ந்து பேசுகிறார்.

கிராமங்களுக்குச் சென்று சேவை புரியுங்கள் என்று சொல்லி விட்டால் போதாது, அவர்கள் அங்கு சென்று 'வசதி'யுடன் இருக்க வழிசெய்து தரவேண்டும்—தத்துவ உபதேசம் செய்து விட்டால் பலன் கிடைக்காது என்று கூறுகிறார். கூறுவதுடன், நகரங்களில் தங்கி வேலை பார்ப்பவர்களுக்குத் தரப்படுவதைவிட, கிராமம் சென்று சேவை செய்பவர்களுக்கு, ஊதியம் அதிகமாக்கப்பட வேண்டும், என்று எடுத்துரைத்து, அதுபோல ரஷியாவில் நடைபெறுவதாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

மாஸ்கோ போன்ற நகரங்களில் வேலைபார்க்கும் டாக்டர்களுக்குத் தரப்படும் சம்பளத்தைப் போல மூன்று மடங்கு அதிகமான அளவு சம்பளம், கிராமங்களில் வேலை செய்யும் டாக்டர்களுக்குத் தரப்படுகிறதாம்.

இந்தத் தகவலைத் தந்து, யோசனை கூறுவதுடன் அவர் அமையவில்லை.

"நானும் கல்கத்தா போன்ற நகரங்களிலே வேலைக்கு அமரும் டாக்டர்களுக்குத் தரப்படும் சம்பளத்தைப் போல இரண்டரை மடங்கு அதிகமான சம்பளம், கிராமம் சென்று 'டாக்டராக' வேலை பார்க்க முன்வருவோருக்குத் தரத் திட்டம் வகுத்து வேலை செய்து வருகிறேன்" என்று கூறியிருக்கிறார்.

சேவா உணர்ச்சி-தியாகசிந்தனை-தேசப்பணி—என்று பேச்சுமட்டும் வழங்கினால் பலன் இல்லை, கிராமம் சென்று பணிபுரிய 'தூண்டுதல்' பணசம்பந்தமாகவும் தரப்படுதல் வேண்டும், என்பதை ஒரு முதலமைச்சர் உணர்ந்து வெளிப்படையாகப் பேசியது 'நாசுக்காக' இல்லை என்று சிலர்கருதக் கூடும்—ஆனால் தத்துவம் பேசுவதைவிட, நடைமுறையில் இலட்சியம் ஈடேற வேண்டும் என்று எண்ணுபவர்கள், நிச்சயமாக டாக்டர் ராய் கூறியுள்ள சிரிய யோசனையைக் கவனிக்க வேண்டும்.

கிராமம் செல்லுங்கள் என்று நகரப்பிரமுகர் கூறும்போது, சம்பளத்தைப் பெரிதாகஎண்ணாதீர்கள் சேவா உணர்ச்சிதான் இருக்க வேண்டும் என்று ஆயிரம் இரண்டாயிரம் சம்பளம்பெறும் பெரியவர்கள் பேசும்போது, கேட்போர் நிச்சயமாக, அதை நாடக மேடையில் வரும் ஒரு கட்டம் போல, பிரமுகர்களின் அன்றாட அலுவலிலே அஃதொன்று என்று கொள்வார்களே தவிர, "ஆஹா! என்ன அநியாயம்! இதுநாள்வரையில் இப்பேருண்மையை அறியாது போனேனே; இனி நான் நகரில் தங்கிடமாட்டேன். நாளைப்போகாமல் இருப்பேனா, எந்தநாளும் நகரமதில் வசிப்பேனா!" என்று பாடிடமாட்டார்கள்.

கிராமங்களுக்கு உயர்தர வைத்ய வசதியை எப்படியும் செய்து தர வேண்டும் என்பதைப் பிரச்சினையாகக் கொள்ள வேண்டுமே யன்றி, கிராமம் செல்லும் மனப்போக்கை படித்தோரிடம் புகுத்துவதற்காக என்னென்ன பேசுவது என்பதைப் பிரச்சினையாகக் கொள்ளக் கூடாது.

நடைமுறை உண்மையை உணர்ந்து டாக்டர் ராய் பேசுகிறார்—சிந்தனையைக்கிளற இந்தப்பேச்சுப் பயன் படவேண்டும்.

மூவருக்கு ஒருவர்!

"இது என்ன பிரமாதம்! குப்பை கூட்டுவது கடினமானதா, அல்லது யாராலும் செய்ய முடியாத வித்தையா! மூன்று பேர்களால் எவ்வளவு கூட்டித் தள்ள முடிகிறதோ அவ்வளவும் நான் ஒரே ஆள், கூட்டித் தள்ளுகிறேன்! பாருங்கள் வேண்டுமானால்!"

ஜோசப்ஜெல் என்பவர் இது போலச் 'சவால்'விட்டார்; யாரிடம்? குப்பை கூட்டுவோரிடம்! தன்னாலே அந்த வேலையை அவர்களை விடத் திறமையாகச் செய்ய முடியும், என்று கூறினார், அந்த டிப்டி மேயர்!

ஜோசப்ஜெல், ஸ்டிராஸ் பர்க் நகராட்சியின் துணைத் தலைவர்.

அவருக்கு ஏனோ இப்படி ஒரு அபூர்வமான 'ரோஷம்' பிறந்து விட்டது—ஒரு நாள், மார்க்கட் மைதானம் சென்றார், சட்டையை மடக்கினார், கையில் கூட்டுக் கோலெடுத்தார், கூட்ட ஆரம்பித்தார்!

வாரச் சந்தை அன்றுதான் முடிவுற்றதால், மார்க்கட் மைதானத்தில், ஏராளமான குப்பை கூளம், பழத்தோல் குவியல் குவியலாக; அழுகிய காய்கறித் துண்டுகள், காகிதம்,—இப்படி.

சந்தைப் பேட்டையின் ஒரு முனையிலிருந்து டிப்டி மேயர் கூட்டத் தொடங்கினார்.

மற்றொரு முனையிலிருந்து மூன்று கூட்டும் தொழிலாளர் வேலையைத் துவக்கினர்.

ஒருவர், மூவருக்கு ஈடு! மூவர், ஒருவர் வேலையின் அளவுக்கு!!

இந்தப் போட்டியில், டிப்டி மேயர் வெற்றிபெற்றார் என்றும், சந்தைப் பேட்டை துப்புரவாயிற்று என்றும் செய்தி கூறுகிறது.

சந்தைப் பேட்டையில் துணைத் தலைவர் சாதித்த வெற்றியின் பலன் என்னஎன்று சிந்திக்கவேண்டும்—ஏனெனில் இதுஒரு தனிமனிதருடைய விசித்திரப் போக்கு அல்ல, இஃதோர் பிரச்சினையாகிவிட்டிருக்கிறது, இப்போது.

பாட்டாளிகள் ஏதோ பிரமாதமான, யாராலும் சாதிக்கமுடியாத, எவருக்கும் இயலாத அரும் பெரும் வேலையைச் செய்து விடுவதாக எண்ணிக்கொள்கிறார்கள் என்றும், தங்களைவிட்டால் அந்த வேலைக்கு வேறுயார் இருக்கிறார்கள், யாரால் முடியும் என்று எண்ணி முடுக்குடன் நடந்துகொள்கிறார்கள் என்றும், அந்த மனப்போக்கை வளரவிடக்கூடாது என்றும், அதற்காக ஓரோர் சமயம், பாட்டாளிகளுக்குப் புத்தி புகட்டுவதுபோல, அந்த வேலையைத் தாங்கள்செய்து காட்டவேண்டுமென்றும், அங்ஙனம் செய்து காட்டினால் பாட்டாளிகள் அடக்க ஒடுக்கமாகி, இட்ட வேலையைத் தட்டாமல்செய்து முடிப்பர் என்றும், ஓர் கருத்து மேட்டுக் குடியினரில் ஏட்டின் மூலம் சிலபல கருத்துகளைப் பெற்றவர்களிடமும், அதிகாரத்தில் அமர்ந்திருப்போர் சிலரிடமும் படமெடுத்தாடுகிறது!

எங்களாலும் முடியும்! எங்களால் உன்னைவிடத் திறமையாகச் செய்ய முடியும்! — என்று கூற வேண்டிய நிலைமை ஏன் வந்தது.

பாட்டாளிகள், தங்களுக்குற்ற குறைபாடுகளைக் களையும்படியும், தங்கள் வயிற்றுக்குத் தேவையான பண்டம் கிடைக்குமளவு கூலி தர வேண்டுமென்றும் கேட்கிறார்கள்—அவ்விதம் கேட்பவர்களின் வயிற்றில் அடிக்க எண்ணிடும் வன்கணாளர்களிற்சிலர், ஸ்டிராஸ்பர்க் டிப்டி மேயர்போல, நீங்கள் மூன்றுபேர் செய்யும் காரியத்தை நான் ஒருவனே செய்கிறேன் பார் என்று கூறிடும் போக்கில் நடந்துகொள்கிறார்கள்.

இந்த மனப்போக்கு இங்கும் சில பல சமயங்களில் தோன்றிடுவதைக் காணலாம்.

எப்போதாவது, தாங்கமுடியாத தொல்லையை நீக்கிக் கொள்வதற்காகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால், முதலாளிகளும் அவர்களுடைய 'முத்திரை மோதிரங்களும்' நாமே அந்த வேலையைச் செய்து முடிப்போம் என்று கிளம்புகிறார்கள்.

நகராட்சியிலுள்ள குப்பை கூட்டுவோர், மிகக் குறைந்த கூலி தரப்படுவதால் குமுறி, கூலி உயர்வுக்காகக் கிளர்ச்சி நடத்தி, கேளாக் காதினராக அதிகாரிகள் இருப்பது கண்டு, வேலை நிறுத்தம் செய்வதுண்டு—உடனே நகரத்தந்தைகள்—அதாவது கவுன்சிலர்கள்—குப்பை கூட்டக் கிளம்புவர்!! அவர்கள் கிளம்புவதற்கு முன்பு, பூக்கடைக்கும் புகைப்படமெடுப்போர் கடைக்கும், போய்விட்டு வருவர் — பத்திரிகையில் படமும் வரும், செய்தியும் பத்தி பத்தியாக வரும்!

பாட்டாளிகளுக்குப்புத்தி புகட்டுகிறார்களாம், பிரமுகர்கள்!!

ஸ்டிராஸ்பர்க் துணை மேயர், மூன்று குப்பை கூட்டிகளின் வேலையை அவர் ஒருவராகவே செய்து முடித்தார். வெற்றி பெற்றார்! அதனால் விளையும் பலன் என்ன? பெறப்படும் பாடம் யாது?

அவர்போன்றார் எண்ணிக்கொள்வது, பாட்டாளிகள் தங்கள் வேலையைப்பற்றிப் பிரமாதமாக எண்ணிக்கொள்ளமாட்டார்கள் என்பது.

(13-ம் பக்கம் பார்க்க)

சிங்கம் முதல் சிற்றெறும்பு வரையில்....!

மிருகங்களை வேடிக்கைக்காகவும் பெருமைக்காகவும், வளர்த்துவரும் வழக்கம் நீண்ட காலமாக இருந்து வருகிறது.

கிருஸ்து சகாப்தத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்குமுன்பே மிருகக்காட்சி சாலைகளை அமைத்திருந்தனர்.

மிகப் பழங்காலத்திலே சீனாவில் மன்னர்கள் மிருகக் காட்சிச்சாலை அமைத்திருந்தனர்.

பொழுது போக்கிற்கு அல்ல! மிருகங்களைக் கவனித்து, அறிவு பெறுவதற்காம்!!

ஈஜிப்ட் நாட்டில், பல மிருகங்கள் தெய்வங்களாகப் பூஜிக்கப்பட்டன.

ரோம் நாட்டவர், மிருகங்களைப் பொழுது போக்குக்குப் பயன் படுத்தினர்.

குதிரைகள் பூட்டிய ரதம்! சிங்கங்களுடன் சண்டை போடுவது—ஆகிய வீர விளையாட்டில் ரோம் நாட்டவர் திளைத்திருந்தனர்.

டெஸ்லிகோபஸ் எனும் ரோம் வீரன் தன் வெற்றி விழாவில், நாலு சிறுத்தையும் நாலு புலியும் பூட்டப்பட்ட ரதத்தில் பவனி வந்தான்!!

கரோடஸ் என்ற சிலம்பக்கூட வீரன் 100 சிங்கங்களைக் கொன்றிருக்கிறான் போரிட்டு!

நீரோ மன்னன், போபியா எனும் ஒரு பெண் புலியை அன்புடன் வளர்த்து வந்தானும். மன்னன் கூடவே அந்தப் புலி ஆசனத்தில் அமர்ந்து விருந்து வைபவங்களில் கலந்துகொள்ளுமாம். தர்பாரில் இருந்துகொண்டு தனக்குத் தொல்லை கொடுக்கிறவர்களை விரட்ட நீரோ, இந்தப் பெண் புலியை ஏவுவானும்!!

சிங்கம்

மனிதர்களைப் பற்றிய செய்திகளையே படித்துச் சலிப்படைந்திருப்பவர்களுக்கு, இதோ ஒரு மிருகத்தின் செய்தி — வனராஜா அல்லவா சிங்கம், அந்தக் காட்டரசன் விஷயம். அதிலும் இந்தச் சிங்கம், சாதாரணமானதல்ல; பிரிட்டிஷ் ஏகாதிபத்ய சிங்கம் என்று பெயரெடுத்தாரே சர்ச்சில் அவருடைய வளர்ப்பு!



ரோடா என்ற இந்தச் சிங்கம், லண்டன் மிருகக்காட்சிச் சாலைக்கு, சர்ச்சில் கொடுத்தார்; அவருக்கு ரோடா குட்டியாக இருந்தபோது யாரோ பரிசளித்தனர். இப்போது ரோடா சர்ச்சில்போலவே வயோதிகப் பருவமடைந்து, வேலையினின்றும் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறது!—ஐம்பது குட்டிகளுக்குத் தகப்பன்! வயது அதிகமாகிவிட்டதால், இந்தச் சிங்கம் இனித் தனியான விடுதியில் வைத்துப் பராமரிக்கப்படும். மிருகக் காட்சிச் சாலையில் வருவோர் போவோரெல்லாம், பார்த்து அதற்குத் தொல்லை தருவது கூடாது, இந்தத் தள்ளாத வயதிலே இதைத் தாங்கிக்கொள்ள முடியாது என்பதற்காக ரோடாவுக்கு ஓய்வு விடுதி அமைக்கப்பட்டிருக்கிறது! பிரிட்டிஷ் சிங்கமும், அவருடைய வளர்ப்புச் சிங்கமும் ஒரே விதமான நிலையைப் பெற்றிருப்பது விந்தைதானே!

புலி!

இதோ இந்தப் புலியின் வேலையைக் கேளுங்கள்! போலீஸ் புலிகள் தேடித் தேடி அலைகிறார்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை! குதிரை பறிபோன பிறகு, கொட்டிலைக் கண்டுபிடிக்கிறார்கள். ஒரிசா காட்டிலே உள்ள ஒரு புலி, போலீஸ் புலிகளைக் கேலி செய்வதுபோல, கள்ளச் சாராயம் காய்ச்சும் இடத்தின்மீது படை எடுத்திருக்கிறது. ஆறு புலிகள் அடர்ந்த காட்டிலிருந்து கிளம்பி, கிராமங்களிலே புகுந்து அட்டகாசம் செய்தன—அதிலே ஒரு புலி, குன்றின்மீது ஒரு மறைவிடத்திலே, கள்ளச் சாராயம் காய்ச்சும் இடத்திலே நுழைந்தது! அப்போது அங்கு

ஒரு ஆசாமி, சாராயம் காய்ச்சிக்கொண்டிருந்திருக்கிறான். போலீஸ் புலி நுழைந்தால், எதிர்த்துக்கூட இருப்பான் — நுழைந்ததோ புலி! என்ன செய்வான்? நொப்பும் நுரையும் தள்ளிற்று. புலி அவனைப் பிய்த்திடலாயிற்று. அதேபோது அவனுடைய சகாக்கள் அங்கே வந்தார்கள் கூட்டமாக. என்னதான் புலியாக இருந்தாலும், தன் வலி மாற்றான் வலி இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்கத்தானே வேண்டும். புலி ஓடிவிட்டது—காடு நோக்கி! தாக்குண்டவன் குற்றுயிராகக் கிடந்தான்!

கரடி

தனி ஆளைத் தாக்கிய புலி சிறு கூட்டம் வந்ததும் ஓடிவிட்டதல்லவா—இதோ ஒரு கரடிபட்டபாட்டைக் கேளுங்கள், பதின்மூன்று வயதுச் சிறுவனிடம்! இண்டியானா எனும் இடத்தில் உள்ள மிருகக்காட்சிச் சாலையில், 100 பவுண்டு எடையுள்ள ஒரு கரடி! அது அங்கு ஊழியம் செய்பவன் மீது பாய்ந்து தாக்கிற்று. அவன் பதறினான். பதின்மூன்று வயதுப் பையன், ஒரு மண்வெட்டியை எடுத்துக்கொண்டு

கூண்டுக்குள் பாய்ந்தான் — கரடி தாக்கிற்று, இவன் சளைக்கவில்லை, போராடினான்—சாக இருந்த வேலைக்காரன் காப்பாற்றப்பட்டான்—அடி தாளமாட்டாமல் கரடி பின் வாங்கிற்று! பையனுக்குக் காலிலே அடி—சிகிச்சை செய்யப் படுகிறதாம்.

யானை

யானைகளின் செய்தியும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது இந்தக் கிழமை. ஆமதாபாத்துக்கு அருகே உள்ள விஸ்நகர் எனும் இடத்திலே சாதுக்கள்முகாமில் இரண்டு யானைகள் உள்ளன. ஒன்று சிவன்—மற்றொன்று சக்தி—அதாவது, ஆண் பெண்!

பெண் யானையைப் பராமரிக்கும் மாவுத்தன் அதற்கு நிறையத் தீனி தந்து வந்தானாம்.

ஆண் யானைக்காக இருந்த மாவுத்தன், அதுபோலப் பராமரிப்பதில்லை.

அதனால், ஆண் யானைக்குப் பொறாமை பிறந்தது, பெண் யானையிடம்! தன் மாவுத்தனைத் தூக்கி எறிந்ததாம் கோபத்துடன்—அத்துடன் விடவில்லை, பெண் யானைக்கு இருந்தானே மற்றோர் மாவுத்தன், அவனைப்பிடித்திழுத்து காலின்கிழ் போட்டுத் துவையலாக்க முனைந்தது. பெண் யானை பார்த்தது — தன்னைப் பராமரிப்பவனைக் கொன்று போட ஆண் யானை முனைவது கண்டு கடுங்கோபங்கொண்டு, அந்த மாவுத்தனை, ஆண் யானையின் பிடியிலிருந்து இழுத்து வெளியே எறிந்து, உயிர் பிழைக்கவைத்தது. ஆமதாபாத்திலிருந்து புதிதாக ஒரு மாவுத்தன் தருவிக்கப்பட்ட பிறகே, ஆண் யானை அடங்கிற்றாம்,

'காதல் மடப் பிடியோடும்
களிறு வருவன கண்டேன்'

என்று பாடல் இருக்கிறது. இருந்து? பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும் அல்லவா!!

இதைத் தெரிந்துதான்போலும் நேரு பண்டிதர், யானை விஷயத்தில் தாராள சிந்தனையுடன் நடந்துகொண்டிருக்கிறார். அசாம முதலமைச்சர், குடி-அரசுத் தலைவர் ராஜேந்திர பாபுவுக்கு ஒரு ஆனையைப் பரிசளித்திருக்கிறார், பெயர் உதயகிரி. இது டில்லியில் இருப்பதற்காக விடுதி அமைப்பதற்காகச் செலவிடப்படும் பொருள் மிக அதிகம் என்று பார்லிமெண்டில் ஒரு உறுப்பினர் புகார் செய்தார். நேரு பண்டிதர், குடி-அரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்ட யானையின் விஷயத்தில் இவ்விதமான 'கஞ்சத்தனம்' காட்டுவது கூடாது என்று கூறினார் — பண்டிதர் பேச்சுக்கு மறு பேச்சு உண்டா? எனவே, யானைக்கான செலவுத் தொகை குறைக்கப்படவில்லை. உதயகிரிக்கு வந்த தொல்லை, இத்தோடு தீர்ந்துவிடவில்லை. அசாமில் குளிர்ச்சி



யான பகுதியில் வசித்துவந்த உதயகிரிக்கு புது டில்லியின் கடுமையான வெப்பம் தாங்கவில்லை; இளைத்துப் போயிற்று: இதனைக் கண்டு, இப்போது குளிர்ச்சியான டேராடன் எனும் இடத்தில் உதயகிரிக்கு 'விடுதி' அமைத்திருக்கிறார்கள். டில்லி சர்க்காருடைய விசேஷ அன்பு கிடைத்திருக்கும் போது உதயகிரிக்கு என்ன குறை!

குரங்கு

நேரு, மாம்பழம் நறுக்கிக்கொடுக்க புல்கானின் அதைச் சாப்பிட்டு ருசியில் சொக்கிப்போனார் என்று பெரியவர்கள் பற்றிய செய்தி படித்தோம்—இதோ கேளுங்கள், சீனா நாட்டுக்குத் தூதுவராகச் சென்று பணியாற்றியவர், எகிப்து நாட்டிலே தூதராக இருந்தவர், இப்போது ராஜ்யங்கள் அமைப்பதற்காக நிறுவப்பட்டுள்ள கமிஷனில் உறுப்பினராக உள்ளவர் சர்தார் கே. எம். பணிக்கர், அப்படிப்பட்ட பெரிய புள்ளி, கொளுத்திக் கொடுத்த சிகரெட்டை வாங்கிப்பிடித்து, சுருள் சுருளாகப் புகைவிட்டு மகிழும் பெருமை, ஒரு குரங்குக்குக் கிடைத்திருக்கிறது. ஆமதாபாத்



மிருகக் காட்சிச் சாலைக்கு சர்தார் பணிக்கர் போயிருக்கிறார்—குரங்கு இருந்தது — வேடிக்கைக்கு அதனிடம் ஒரு சிகரட்டை நீட்டினார்— வாங்கிக் கீழே எறிந்துவிட்டது! சர்தார் பணிக்கருக்கு மிருகக் காட்சிச்சாலை நிர்வாகி யுக்தி சொல்லிக்கொடுத்திருக்கிறார், சிகரட்டைக் கொளுத்திக் கொடுங்கள் என்று. அதுபோலவே சிகரெட்டைப் பற்றவைத்துத் தந்தார் சர்தார், குரங்கு வாங்கி, 'குஷியாக'ப் பிடித்து சுருள்சுருளாகப் புகையை விட்டு ரசித்தது! பயன் தரத்தக்க வகையில் இருந்தால்தான் குரங்கு கூட வாங்கிக்கொள்கிறது என்பதை ராஜ்யங்களைப் பிரித்து அமைக்கும் விஷயமான அறிக்கை தயாரிக்கும் பணிக்கர் அறிய வேண்டியது அவசியமல்லவா!

எறும்பு தின்னி!

எது இஷ்டமோ அதைக் கொடுத்தால்தான் இந்தப் பிராணிகள் கூட வாங்கிக்கொள்கின்றன— உபயோகிக்கின்றன. தென் அமெரிக்காவில் எறும்பு தின்னி எனும் ஒருவகையான பிராணிகள் உள்ளன? இவைகள் எறும்புப் புற்றுகளைத் தோண்டி, அதிலே இருக்கும் எறும்புகளைத் தின்னும். பெர்லின் (ஜெர்மனி) மிருகக் காட்சிச்சாலையில் இரண்டு எறும்பு தின்னிகள் உள்ளன. பெர்லின் நகரில் ஒரு பகுதியில் சென்ற கிழமை, பல இலட்சக்கணக்கான எறும்புகள் படை எடுத்துச் சென்றன! இந்த எறும்புப் படையை அழிக்க, மிருகக்காட்சிச் சாலையிலுள்ள எறும்பு தின்னிகளை

அழைத்து வந்தனர். ஆனால் அவைகள் தீண்டக்கூட இல்லையாம் எறும்புகளை!, காரணம் கூறுகிறார் மிருகக் காட்சிச்சாலை நிர்வாகி. வெள்ளை எறும்புகளை மட்டுமே இவை தின்னுமாம்—வேறு வகை எறும்புகளைத் தொடாதாம்! இப்படி வெள்ளை நிறம் கொண்டுள்ள எறும்புகளைத் தின்பதையே விரதமாகக்கொண்ட விசித்திர ஜந்து இருப்பதுமட்டும், தென் ஆப்பிரிக்க மனு ஸ்டிரிடம் தெரிந்துகொண்டாரானால், அடே அப்பா! அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும்! வெள்ளையர் பாதுகாப்புடன், வெள்ளை எறும்புகளின் பாதுகாப்புக்காகவும் அவர் படை திரட்டக் கிளம்பிவிடுவார்!! இவ்வளவு முரட்டுத்தனமாக நடந்துகொள்ளும் அந்த ஸ்டிரிடம் என்பவரைக் கட்டுப்படுத்த, புத்தி புகட்ட யாராலும் முடியவில்லையே! ஏன்! சர்வதேசச் சட்டத்தையும் அந்த ஆவேசக்காரர் மதிப்பதில்லையாமே, இது ஏன்? ஏன் இவரை இப்படி அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்கத் தோன்றும்—என்ன செய்வது, சட்டத்தால் எல்லாவற்றையுமா சாதித்துவிட முடிகிறது. சட்டம் ஒரு எருமையிடம் தோற்றிருக்கிறது தெரியுமா—ஆமாம்! எருமையிடமேதான்!

எருமை!

எருமைபோல இருக்கிறான் என்றல்லவா ஏளனம் செய்கிறோம், கொழும்புச் செய்தி ஒன்று கூறுகிறது, அடர்ந்த காட்டுப்பாங்கான பிரதேசத்தில் ரயில் ஓடிக்கொண்டிருந்தபோது, 13 எருமைகள் ரயில் பாதையில் நின்றுகொண்டு தொல்லை கொடுத்தனவாம், ரயில்

தடம் புரண்டுவிட்டது—எருமைகள் வழிவிட மறுத்தனவாம். இப்படிப்பட்ட போக்கிரித்தனம் செய்த எருமை ஒன்று, கோர்ட்டுக்கு இழுத்துக்கொண்டு வரப்பட்டது, சென்ற கிழமை. உத்திர பிரதேசத்தைச் சேர்ந்த குக்கிராமமொன்றில் ஒரு முரட்டு எருமை செய்து வந்த அட்டகாசம் தாங்கமாட்டாமல், அதை இழுத்துக் கொண்டுபோய் தாசில்தார் கோர்ட்டிலே நிறுத்தினார்கள்; அவர் இந்தப் போக்கிரிக்குச் சிறைத் தண்டனை விதிக்கிறேன்! என்று தீர்ப்பளித்தார். சிறைக்கு இழுத்துச் சென்றனர்—அங்கே உள்ள அதிகாரிகளோ, மிருகங்களை அடைத்து வைக்கும் அதிகாரம் எங்களுக்குக் கிடையாது என்று கூறிவிட்டனர். மனிதர்களை மிருகங்களாக்கி வெளியே அனுப்புவதற்காக உள்ள பயிற்சிக் கூடத்திலே, மிருகத்துக்கு இடம் கிடையாது என்றதும், எருமையை அதன் போக்கிலே விட்டுவிட்டார்கள்!! சட்டம் என்னை என்ன செய்யும் என்று கேட்க எருமைக்கு முடியாது! ஆனால் அதன் இறுமாப்பான நடையின் பொருள் அதுவாகத்தான் இருக்க வேண்டும்!!

பசு

எருமை, ஒரு நுட்பமான சட்டப் பிரச்சினையைக் கிளப்பிவிட்டது—சாதுவான பிராணிதான் என்றாலும். பசு இருக்கிறதே, அது, பெரிய அரசியல் பிரச்சினைகளைக் கிளப்பி விட்டிருக்கிறது! பசுவை வெட்டாதே! பசு, கோமாதா, புண்ய மாதா! என்று கோஷமிட்டுக் கொண்டு சத்யாக்ரகம் செய்து சிறை செல்வதற்கு, வடக்கே ஒரு கூட்டமே இருக்கிறது. இது, 'இந்து—முஸ்லீம் பிரச்சினையாகக் கோர உருவெடுக்காதபடி, பொறுப்புள்ள தலைவர்கள் மிகச் சிரமப்பட்டுத் தடுத்து வருகிறார்கள். இப்போது, பசுக்களை, வெட்டுவதிலிருந்து காப்பாற்ற ஒரு உருவான திட்டம் தயாரித்திருக்கிறார்கள். பால்தரும் பக்குவமான பருவம் இருக்கும் வரையில்தான் பசுவைப் பராமரிக்கிறார்கள், பிறகோ பசுவைக் காப்பாற்றுவது வீணான செலவு என்று கருதி, அதைக் கசாப்புக்கடைக்கு விற்றுவிடுகிறார்கள். எனவே பசுக்களைக் காப்பாற்றவேண்டுமானால், அவைகளை அந்திமக்காலத்திலே வைத்துக் காப்பாற்ற ஒரு அமைப்பு வேண்டும் என்று கருதி, இப்போது கிழப் பசுக்களுக்கு ஒரு ஆஸ்ரமம் வைத்திருக்கிறார்கள், தங்களிடமுள்ள பசு படுகிழமாகி விட்டால், இனி இந்த ஆஸ்ரமத்துக்கு அனுப்பிவிடலாம்—ஒரு சிறு கட்டணம் கட்டவேண்டும்—அங்கு அந்தக் கிழப்பசுவை வைத்துக் காப்பாற்றுவார்கள்!!

பரவாயில்லையே, பசுவாகப் பிறந்தாலாவது இந்த வாய்ப்புக்கிடைக்கும்போலிருக்கிறது. மாடாக உழைத்து எலும்புந் தோலுமாகி இனி உழைக்க இலாயக்கில்லை

என்று வேலையினின்றும் வெளியேற்றப்பட்டால், 'அக்கடா' என்று விழுந்துகிடக்க வழி இல்லையே, பராமரிக்க யாரும் முன்வருவதில்லையே, பசுக்கள்பாடு யோகம்தான், 'ஆஸ்ரமம்' அமைத்துவிட்டார்கள், எங்களைக்கவனிக்கத்தானே எந்தப் புண்யவானும் முன்வரக்காணோம், என்று பாட்டாளிகள் எண்ணுவர்! ஆனால் பசுவும் பாட்டாளியும் ஒன்றாக முடியுமா — முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், பசுக்களுடைய ரோமக் கால்களிலே இருக்கிறார்கள் என்று ஐதீகம் இருக்கிறது; பாட்டாளிகளிடம் அதுபோல என்ன மகிமை இருக்கிறது என்று வைதீகங்கள் கேட்கும். எப்படியோ ஒன்று வயதான பிறகு, வேலை செய்யும் சக்தியுமிழந்த பிறகு, அசைபோட்டுக்கொண்டு அந்திய காலத்தை ஆனந்தமாகக் கழிக்க ஆவினத்துக்கு ஆஸ்ரமம் ஏற்பட்டுவிட்டது.

பூனை

பூனை என்றால் சாமான்யமாகக் கருதிவிடாதீர்கள். மூன்று சிறுவர்கள், பூனையிடம் வைத்த பாசத்தால் மாண்டுபோன செய்தி சமீபத்தில் தான் வெளிவந்தது. மூன்று சிறுவர்கள்—ஒரு பூனையை அன்பாக வளர்த்து வந்தார்களாம்! பூனையின் துடுக்குக்குணம் தான் தெரியுமே—ஒரு கிணற்றிலே

விழுந்துவிட்டது. அதைக் காப்பாற்ற ஒரு சிறுவன் கிணற்றில் குதித்தான்—மற்ற இருவரும் ஆவலுடன் கிணற்றை எட்டிப் பார்த்தனர்—வழுக்கிவிழுந்தனர்—மூன்று சிறுவர்களும் கிணற்றிலே பிணமாயினர்—பூனையுங்கூடத்தான்.

ஒரு பூனையிடம் இப்படி ஒரு பைத்யக்காரத்தனமான ஆசை வைத்ததால்தானே இந்தக்கதி நேரிட்டது என்பீர்கள். இப்போது ஒரு பார்லிமெண்ட் மெம்பருக்கு பூனையிடம் பிரமாதமான ஆசை பிறந்துவிட்டது! பூனைவேண்டும்! பூனையை அழைத்து வாருங்கள்!



என்று அவர் பேசுகிறார்! ஏன் தெரியுமோ! பார்லிமெண்டிலே சுண்டெலிகளுடைய தொல்லையைச் சகிக்க முடியவில்லையாம். முன்பு பூனை இருந்ததாம்—அதன் துடுக்குத்தனத்தின் காரணமாகப் பார்லிமெண்ட் வேலையே குந்தகப்படவே, அதை விரட்டிவிட்டதுடன், பார்லிமெண்ட் கட்டிடத்துக்குள் பூனையை நுழையவிடக் கூடாது என்று உத்தரவிட்டனர்! பூனை வெளியேற்றப்பட்டது! பூனை போய்விடவே எலிகள்பாடு கொண்டாட்டமாகிவிட்டது! இப்போது பார்லிமெண்ட் உறுப்பினர் பதறும் அளவுக்குச் சுண்டெலிகள்! எனவேதான் சுண்டெலிகளை ஒழிக்க, பூனையைத் தேடுகிறார்! முன்பு விரட்டிவிட்டு இப்போது அழைத்தால் வருவேனா என்று பூனை கூறுது—கூறினாலும், கட்சியிலிருந்து விரட்டப்பட்டு, மீண்டும் கட்சியிலே அழைத்துச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள பார்லிமெண்ட் உறுப்பினர் யாராவது இல்லாமலிருப்பார்களா, பூனைக்குக் காட்ட! கனடாவில்தான் பூனைக்கு இந்தக் கிராக்கி வந்திருப்பது.

பூனைகளுக்கு ஏதோ இப்போதுதான் இப்படிப்பட்ட கிராக்கி கிடைத்துவிட்டது என்று எண்ணிவிடாதீர்கள், முன்பு பூனையைத் தெய்வமாகக் கும்பிட்டு இருக்கிறார்கள்! இப்போதுதான் ஏதோ பாவம், எலியைப் பிடித்துத் தின்பதும், திருட்டுத்தனமாக இருந்துவரும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது. பூனையைத் துடுக்குத்தனமானது என்று ஏசுகிறோம், ஆனால் முன்னாளில் ஈஜிப்டில், பூஜை செய்தார்கள்! ஆமாம், பூனை புனிதமானது—(சேச்சே! பூனையையா? என்று கேலி பேசுவீர்கள்—இப்போது இங்கு வைதிகர்கள் பசுவைப் புனிதமானது, பூஜிக்கத் தக்கது என்று நம்புகிறார்களே இது கேலிக்குரியதாகத் தெரியவில்லையா!—) சரி, கேளுங்கள், பூனை அதிர்ஷ்டம் அளிக்கும் அபூர்வ சக்தி வாய்ந்ததாகக் கருதி ஈஜிப்டில் வளர்த்து வந்தனர். ராஜ போஜனம், பூனைக்கு! அதற்கு ஒரு குறையும் நேரிடாதபடி பார்த்துக்கொள்ள வேலையாட்கள்! பூனை இறந்துவிட்டால், புதைக்கும் சடங்கு உண்டு! புதைகுழி புனித ஸ்தலமாகிவிடும்! பூனைக்கு ஒருசிறு தீங்கு செய்தாலும், 'பாபம்' பற்றிக்கொள்ளும் என்று ஈஜிப்ட் மக்கள் பயந்திருந்தனர். இதைத் தெரிந்த பர்ஷிய நாட்டரசன், ஈஜிப்ட் மீது படை எடுத்தபோது, முன்வரிசைப் படையினர் ஒவ்வொருவர் கையிலும் ஒரு பூனையை எடுத்துப் போகச் செய்திருந்தான். வருவதோ எதிரிப்படை! தாக்கிக் கொல்ல வேண்டும், இல்லையானால் தாயகம் அடிமைப்படும்! ஆனால் எதிரிகளின் கரத்திலோ பூனைகள்! எதிரியைத் தாக்கினால் பூனைக்குத் தீங்கு நேரிடும்—பூனைக்குத் தீங்கு நேரிட்டாலோ, பாபம் பிடித்துக் கொள்ளும். பீதி அடைந்தனராம்—சண்டையே போடவில்லையாம்!

பூனைப் படையிடம் ஈஜிப்ட் சரணாகதி அடைந்தது!!

கொசுக்கள்

'அஹிம்சா' உணர்ச்சி அற்றவர்கள், சுண்டெலிகளைச் சாகடிக்க பூனையைத் தேடுகிறார்கள், ஆனால் இத்தகைய கொலைபாதகச் செயலுக்கு நாங்கள் ஒருபோதும் சம்மதிக்க மாட்டோம் என்று ரீவா சமஸ்தானத்திலுள்ள வைதிக ஜைனர்கள் கண்டிப்பாகக் கூறிவிட்டனர். ரீவா சமஸ்தானம் விந்தியப்பிரதேசத்தில் இருக்கிறது. இங்கு கொசுத் தொல்லை அதிகம், அதனால் மலேரியா கடுமையாகப் பரவியிருக்கிறது; இதை ஒழிக்கச் சர்க்கார், கொசு ஒழிப்புத் திட்டம் இட்டு, (டி. டி. டி.) மருந்து தெளிக்

கிறார்கள். இதனால் கொசு மட்டுமல்ல, கொசுமுட்டைகளும் அழிந்துவிடும். ஆனால் ஜைனப் பெரியவர்கள், கொசுவா அழிகிறது எங்கள் அஹிம்சா கொள்கையுமல்லவா அழிந்து படுகிறது, இதற்கு நாங்கள் துளியும் இடம் தரமாட்டோம்—மலேரியா தாக்கி எங்களை நோயாளியாக்கினாலும் பரவாயில்லை, பாபம், கொசுக்களை அழித்திடச் சம்மதிக்கமாட்டோம் என்று கூறிவிட்டனர்.

பாம்பு!

மதக் கோட்பாட்டுக்காகவா, மலேரியாவைக் கூடப் பொருட்படுத்தவில்லை என்று கேட்டு ஆச்சரியப்படாதீர்கள்—மலேரியா, காலரா பிளேக்போல உடனடியாகச் சாவு தருவதல்ல—மலேரியாவைப் பொருட்படுத்தாத மகானுபாவர்கள், இந்த 'மகராஜிகளிடம்' என்ன செய்யமுடியும் என்று பாருங்கள். வடக்கே, நாகபஞ்சமி விழாவன்று, பெண்கள் பாம்புகளைப் பூஜிக்கிறார்கள் — இன்றும். மரத்தடியில், கல்லால் செதுக்கி வைக்கப்பட்டுள்ள பாம்புகளை அல்ல! பாம்புப் புற்றுக்குப் பால் வார்த்துவிட்டு வரும் பக்குவமான பூஜை அல்ல; படமெடுத்தாடும் பாம்பு, நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பு! காடுகளிலிருந்து பாம்புப் பிடாரர்கள், நாக பஞ்சமிக்கு ஒரு மாதத்துக்கு முன்பே பாம்புகளைப் பிடித்துக் கொண்டு வந்து தருகிறார்கள். பழங்கலத்தில் பாம்புகளை வைத்து, பராமரித்து வருகிறார்கள் அப்பாவையர். நாக பஞ்சமியன்று பாம்புகளை வெளியே எடுத்துவிடுவார்கள்—பூஜை செய்வர்—பால் பழம் தருவர்—

(12-ம் பக்கம் பார்க்க)

அளவுகோல் எது?

தம்பி,

நாடு பெருங் கொந்தளிப்பில் சிக்கிவிடும், திராவிடர் வீடுகளில் இளைஞர்கள் பலர் துப்பாக்கிக்கும் தடியடிக்கும் இலக்காகி இம்சிக்கப்பட்டது பற்றியும், சிறையில் போட்டு அடைக்கப்பட்டனர் என்பது குறித்தும் பேசிடும் காட்சிகள் இருக்கும், கலாம் செய்வோருக்கும் குழப்பம் விளைவிப்போருக்கும் நல்ல வேட்டையாடும் வாய்ப்பு ஏற்படும். சச்சரவுகள், சமர், சந்துமுனை அடிதடிகள், உருட்டுக் கண்ணினர் மிரட்டும் குரலினர் ஆகியோருக்கெல்லாம் நிரம்ப வேலை கிடைத்து வேண்டத்தகாத நிகழ்ச்சிகள் பல நெளியும் என்றெல்லாம் நீயும் நானும், அச்சப்பட்டுக்கொண்டிருந்தோம், சென்ற கிழமை.

பெரியார் சிறைப்படுவதுடன் அவர் மீது பயங்கரமானது என்று கருதப்படும் தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, வழக்கு நடைபெறும், என்று அஞ்சினோம்.

டில்லி மந்திரி பந்த் மிரட்டிய போதும் சரி, பெரியார் தமது போர் பற்றிய விளக்கமளிக்கையில் 300 பேர் சாகவேண்டி நேரிடலாம் 1000 பேர் காயப்படவேண்டி நேரிடக்கூடும், ஒரு பத்தாயிரம் பேர் சிறைசெல்லவேண்டி ஏற்படக்கூடும் என்று கூறினார்—அதனைக் கேட்டபோதும் உண்மையிலேயே நான் பதறிப்போனேன்.

எப்படியோ ஒன்று நமக்கெல்லாம் நிம்மதியும் நாட்டுக்கு அமைதியும் கிடைத்திடத்தக்க விதமாக, நிலைமை உருவெடுத்தது—மகிழ்கிறேன், தம்பி, உண்மையிலேயே பூரிப்படைகிறேன்.

அதிர்ச்சி தரும் அமளிகள், மயிர்க் கூச்செறியத்தக்க கிளர்ச்சிகள், மூக்கின்மீது விரல்வைத்து ஆச்சரியப்படத்தக்கதான போராட்டங்கள் ஆகியவைகளின் மூலமாகப் பெறக்கூடிய புது வலுவைவிட, நாட்டு மக்களிடம், குறிப்பாக இன்னமும் காங்கிரசிலுள்ள திராவிட மக்களிடம் கொள்கையைப் புகுத்துவதிலே பெறுகிற வெற்றியையே நான் பெரிதும் விரும்புகிறவன். அப்படிக் கூறுவதால், போரே கூடாது என்பவனல்ல, போரில் கலந்து கொள்ளாதவன் என்றோ போர் வாடை அடிக்கும்போது புது டில்லிக்கு உத்யோக வேட்டைக்கு ஓடிவிட்டவனென்றோ பொருள் கொள்ள பொறுப்புள்ள யாரும் துணிய மாட்டார்கள்—எதையும் துணிவுடன் கூறிடும் போக்கினர்பற்றி நான் பொருட்படுத்தப் போவதில்லை.

காங்கிரஸ்காரர்மனதில்,வேதனை, வெறுப்புணர்ச்சி பகை உணர்ச்சி மூட்டிவிடக்கூடிய வகையிலே கிளர்ச்சிகள் அமைவதை, நான், இன்று அல்ல, எப்போதுமே விரும்பியதில்லை. இந்த என் எண்ணத்தை எடுத்துரைக்க என்றும் தயங்கினதுமில்லை.

ஆகஸ்ட்டு முதல் நாள் அய்யா அவர்கள் சொன்னபடி கொடி கொளுத்தப்பட்டிருந்தால், நிச்சயமாக அவரைத் தூசிகூட அணுகாது, அவரைப் பொறுத்த மட்டில் எத்தகைய எதிர்ப்பும் பகையும் துரும்பு; எனவே, அவருக்கு ஒரு சிறு குறைபாடும் ஏற்படாது—ஆனால், அன்று, மூண்டிருக்கக்கூடிய பகை உணர்ச்சியும் வெறுப்புணர்ச்சியும் நிச்சயமாக திராவிட இயக்கத்தை பல ஆண்டுக் காலத்துக்குப் பழிக்கும் பகைக்கும் உள்ளாக்கிவிட்டிருக்கும். 'பரவாயில்லை, அவர்கள் கூறுவதிலும் நியாயம் இருக்கிறது' என்று சொல்லும் அளவுக்கு நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கும் காங்கிரஸ்காரர்கள், நாம் கூறும் எதையும் ஏற்றுக் கொள்ளலாகாது என்ற அளவுக்கு நம்மைவிட்டு விலகிவிடுவார்கள்.

தம்பி, ஒரு கொள்கையை அடிப்படையாக வைத்துப் பணியாற்றும் போது நாளாகவாக எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக அந்தக் கொள்கை ஒரு சிலரிடம் பதிந்துவிடுகிறது என்பது மட்டுமல்ல, வெற்றிக்கு வழி, நாளாகவாக எவ்வளவுக்கெவ்வளவு விரிவடைகிறது, பரவுகிறது, மாற்றாரை உற்றார் ஆக்குகிறது, என்பதுதான் வெற்றிக்குப் பெரிதும் துணை செய்யும்.

இந்த முறையிலேதான், நான், பலகாலமாகவே, காங்கிரஸ் கட்சியில் இன்று உள்ள திராவிடத் தோழர்களில் — அந்தக் கட்சியாலேயே வாழ்ந்து தீரவேண்டியவர்கள் தவிர—மிகப் பலரை நம்மிடம் கொண்டுவந்து சேர்க்கும் வகையான கிளர்ச்சி வேண்டும் என்று கூறிவருகிறேன்.

கோழைத்தனம் என்கிறார், பெரியார்.

ஏறக்குறைய பதினைந்து ஆண்டு பயிற்சிக்குப் பிறகும்—பெரியாரிடம் தான்—பார் தம்பி! என்னைவிட்டுக் கோழைத்தனம் போகவில்லை என்றால், (பெரியாரே கூறுகிறார்!) என் போன்றவர்களையே ஏராளமாகக் கொண்டுள்ள திராவிடச் சமுதாயத்துக்கு, ஏற்றதான ஓர் திட்டமல்லவா தீட்டவேண்டும், தாங்கிக் கொள்ள வேண்டுமே, தம்பி!

ஒரு படைத் தலைவரின் ஆற்ற

லும் அஞ்சாமையும், இடுக்கண் கண்டு கலங்காத போக்கும், ஒரு படையிலுள்ள கோழைகளையும் வீரர்களாக்கிவிடும்–வரலாறு அத்தகைய சம்பவங்கள் பலவற்றைக் காட்டுகிறது—ஆனால் தம்பி, உற்றுக் கவனித்தால் உனக்கு உண்மை விளங்கும் — இவைகள் சம்பவங்கள்! அவ்வளவுதான்.

போர் முறை என்பது இந்தச் 'சம்பவங்களை' இலக்கணமாகக் கொள்வது அல்ல.

எதிரே ஒரு பெரிய படை, தம்பி, எல்லாப் போர்க் கருவிகளுடனும். இந்தப்புறம் ஒரு சிறு படை, பழுதான படைக்கலங்களுடன். ஒரு சிறு கணவாய்தான் இடையில், அதைக் கடந்து அப்பெரும்படை வந்துவிட்டால், இந்தப் படை சின்னாபின்னமாகிவிடும்—என்று வைத்துக்கொள்—தம்பி, நீயும் நானும் அந்தச் சிறிய, ஆனால் சீரிய படையில் இருப்பதாக எண்ணிக்கொள்—நமது படைத்தலைவர் அந்தச் சமயத்தில், அபாரமான வீரதீரம் காட்டி, கணவாயைக் கடந்து, பெரும் படையினைத் துளைத்துக்கொண்டு செல்ல ஆயத்தமாகி, வருக! என்று உத்தரவிட்டு முன்னேறுகிறார், என்றால், பெரிய படை கண்டு பீதி கொள்ளத்தக்க வகையில், சிறிய படை தழலெனப் பாயும், கணவாய் இரத்த ஆருக மாறும், உலக வரலாற்றிலே வீரத்துக்கு ஓர் ஒப்பற்ற சம்பவம் பொறிக்கப்பட்டுவிடும்.

இதைத்தான் நான் சம்பவம் என்கிறேன். இத்தகைய சம்பவம் பற்றிப் படிக்குந்தோறும் படிக்கப் பக்க நின்று கேட்குந்தோறும், வீரம் வீறிட்டெழச் செய்கிறது. என்றாலும், தம்பி, சிறிய படை கணவாயில் பாய்ந்து சென்று பெரிய படையைத் தாக்கி வெற்றி தேடுவதுதான், போர்முறை என்று இலக்கணம் அமைத்துக்கொள்ள மாட்டார்கள்.

போர்க்களத்து எடுத்துக்காட்டினைக் கூறினல், என்னமோபோல இருப்பதானல், தம்பி, இதோ இந்த உதாரணத்தை வேண்டுமானல், கேள்.

கட்டுக் காவலில் உள்ள கட்டழகி, மாடியில்.

அவளைக் காதலிக்கும் ஆணழகன், பக்கத்துத் தோட்டப்புறத்தில்,

கண்ணும் கண்ணும் பேசிவிட்டது — பெற்றோர் பேயராகிவிட்டனர்–நெஞ்சைத் தொட்டிடும் காதற் கடிதம் தீட்டியிருக்கிருன் அந்த நேரிழையாளுக்கு; அதை நேரிடையாகத் தரமுடியாது; எனவே, அதனைச் சிறு கல்லில் சேர்த்துக்கட்டிவிட்டெறிகிருன்–அது அவள்மீது பட்டபோது, கல்லே மலராகிவிடுகிறது—கண்களில் ஒத்திக்கொள்கிருள்......

இது காதலருக்கு ஒரு சம்பவம்.

ஆனல், காதலுக்கே இதுதான் இலக்கணம் என்று கொண்டுவிடக்கூடாதல்லவா.

போரிலும் காதலிலும் சந்தர்ப்பங்கள், சில சம்பவங்களை உருவாக்கும்; அந்தச் சம்பவங்களைமட்டுமே கொண்டு, அவைகளுக்கு இலக்கணம் வகுத்துக்கொள்ளக்கூடாது.

அதே முறையிலேதான், கொடிகளை எரிப்பதும், கோட்டைக் கொடிமரத்தை வெட்டிச் சாய்ப்பதும், குத்தீட்டி வீசுவதும், கொல்லும் வேழத்தை ஏவுவதும் — எல்லாம் சம்பவங்கள் — விடுதலைப் போரிலே—பல நாடுகளிலே.

அந்தச் சம்பவங்கள், திட்டமிட்டு நடைபெற்றவை அல்ல.

அந்தச் சம்பவங்களைக்கொண்டு, ஒரு போர்முறை வகுக்கப்படுவதில்லை.

இந்த எண்ணம் எனக்கு மேலிட்டதால்தான், ஆகஸ்ட்டில் நடைபெற இருந்த அந்தக் காரியம், அவசியமற்ற பகையையும், அணைக்க முடியாத குரோதத்தையும், போக்க முடியாத பழியையும் உண்டாக்கிவிடும் என்று அஞ்சினேன்.

காரணம் எதுவாக வேணும் இருக்கட்டும், அந்தச் சம்பவம் நடைபெறவில்லை, கடைசி நேரத்தில், கொடி கொளுத்துவதைப் பெரியார் நிறுத்திக்கொண்டார்.

எனக்குள்ள பிரச்சினை, போதுமான வாக்குறுதி பெற்றுக்கொண்டு நிறுத்தினரா, இல்லையா என்பதல்ல, என் மகிழ்ச்சி கொடி கொளுத்துவது நிறுத்தப்பட்டது என்பதில்தான்.

பெரியாருக்கு இன்று உள்ள பெரும் செல்வாக்கு சாமான்யமானதல்ல—அதைக் குறைத்து மதிப்பிடும் கயவனல்ல நான் — காங்கிரசிலே உள்ளவர்களிலேயே சில பலருக்கு இன்று செல்வாக்கு இருப்பதை, உதாரணமாகக் காமராஜருக்கு நல்ல செல்வாக்கு இருப்பதை ஒப்புக்கொள்ளும் நான், பெரியாருக்கு உள்ள செல்வாக்கையா குறைத்து மதிப்பிடுவேன். அவருக்கு இன்றுள்ள செல்வாக்கும், அதனை ஈட்டிட அவராற்றியுள்ள அரும் பெரும் பணியும் அபாரம். எதற்கும் அஞ்சுபவரல்ல! எதிர் நீச்சலில் பழகியவர்! கொடி கோட்டை வாசலில் உள்ளதைக் கொளுத்த வேண்டுமென்றாலும், அதனல் ஏற்படக் கூடிய ஆபத்து பற்றித் துளியும் கவலைப்படமாட்டார். அது அவருக்குச்சேவையால் கிடைத்தது மட்டுமல்ல, அவருடைய சுபாவமே அத்தகையது. அந்தக் குறுகுறுப்பான கண்களிலேயே நான் பல சமயங்களில் கோபம் கொந்தளிக்கக் கண்டிருக்கிறேன், அடிக்கடி அலட்சியத்தைக் கொட்டக் கண்டிருக்கிறேன், சில வேளைகளில் பரிவு பச்சாதாபம் தோன்றிடக் கண்டிருக்கிறேன், ஒருபோதும் அந்தக் கண்களிலிருந்து பயம் கிளம்பக் கண்டதில்லை. நானென்றும், தம்பி, பத்து கெஜத் தொலைவிலே இருந்து அவரைப் பார்த்துப் பூரித்திடும் இரசிகனல்ல, பக்கத்திலேயே பத்தாண்டுகளுக்கு மேலாக இருந்தவன், அவரைப் பல கோணங்களிலே இருந்து பார்த்தவன் — பல பிரச்சினைகள் குறித்த அவருடைய பிரத்தியேக கருத்துக்களை அறிந்தவன்—'மேஸ்திரி' வேலையல்லவா பார்த்திருக்கிறேன்.

எனவேதான், திராவிட இயக்கத்தில் வகுக்கப்படும் போர்த்

மூன்றுமாத தவணை!

குதிரைக்காரனுக்கு அவ்வளவு அழகான மகள் இருப்பது அந்த அரசனுக்குத் தெரியாது. தற்செயலாகக் கண்டான். அவளை அடைந்தே தீருவதென்று தீர்மானித்துவிட்டான்.

"உன் மகளைத் திருணம் செய்து கொள்கிறேன்; எனக்குக் கொடு" என்று மன்னன் கேட்டான்.

ஆச்சரியத்தால் தாக்குண்ட குதிரைக்காரன், விழித்தான்.

"யோசிக்காதே! அவளுடைய எடைக்கு எடை தங்கம் தருகிறேன் உனக்கு" என்ருன் மன்னன்.

"மகாராஜா! ஒரு மூன்று மாதம் கெடு கொடுங்கள்" என்று கெஞ்சினன் குதிரைக்காரன்; "யோசித்துப் பதில் கூறவா மூன்று மாதம் வேண்டும்?" என்று மன்னன் கேட்டான். "யோசிக்க அல்ல மகாராஜா! என் மகளுடைய தேகம் சிறிதளவு கனமாவதற்கு!!" என்று பதிலளித்தான் பணத்திலே குறி கொண்ட குதிரைக்காரன்.

திட்டம், அவருடைய ஆற்றலை அளவு கோலாகக்கொண்டு மட்டும் அமையக்கூடாது, எந்தக் கொள்கைக்காக இயக்கம் நடைபெறுகிறதோ, அந்தக் கொள்கைக்குத் திராப் பகையைத் தேடிப் பெறுவதாக இருத்தல் ஆகாது — பரவலான அளவில் செல்வாக்குப் பெறத்தக்கதும், பகைக் கூடாரத்தில் உள்ளவர்களின் உள்ளத்திலும் பரிவு ஊட்டக் கூடியதுமானதாகத் திட்டம் இருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். பிரிந்த பிறகு ஏற்பட்ட பித்தமல்ல இது. ஒன்றாக இருந்த நாள் தொட்டு எனக்குள்ள கருத்து.

துளைத்துவிட்டார்! துளைத்துவிட்டார்! என்று இனிப்புப் பண்டத்தைச்சப்பிக்கொண்டு களிப்புக் கூச்சலிடும் சிறார்போல, பெரியார், கடற்கரைக் கூட்டத்திலே தி.மு.க வையும், குறிப்பாக என்னையும் துளைத்தெடுத்தார் என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார், குத்தும் குணாளர். அவருக்கு மகிழ்ச்சி கிடைப்பது பற்றி எனக்கு எப்போதுமே அதிருப்தி இருந்ததில்லை.

நான் 'துளைக்கப்பட்டேன்' என்று எந்தக் கடற்கரைப் பேச்சு பற்றி அந்த நண்பர் களிப்படைகிறாரோ, அந்தக் கடற்கரை மணல் அறியும், பெரியார் குறித்து இவர் கொண்டிருந்த கருத்துகளை. பழங்கதை— பழங்கதையாகவே போகட்டும்.

என்னை ஏசட்டும், பரவாயில்லை. —நான் தாங்கிக்கொண்டு பழக்கப் பட்டுவிட்டேன்.

ஆனால் ஆகஸ்ட்டு நடைபெற்றிருந்தால், அதனால் ஏற்படக் கூடிய பகை உணர்ச்சி, திராவிடர் இயக்கத்துக்கு நிச்சயமாக ஊறு செய்திருக்கும்.

காங்கிரஸ் வட்டாரத்திலே கிளம்பக்கூடிய பகை உணர்ச்சியும், பொதுமக்கள் மனதிலே கிளம்பக் கூடிய அருவருப்பு உணர்ச்சியும், பெரியாரை அசைக்காது!

அவர் அத்தகைய விரோதப் பெருவெள்ளத்தை எதிர்த்து நிற்கவல்லவர்.

ஆனால், அவர் விரும்புகிற கொள்கைக்காக இருந்து பணியாற்றும் இயக்கம் இருக்கிறதே, தம்பி, திராவிட இயக்கம், அது விரோதப் பெருவெள்ளத்தால் மெத்தப் பாதிக்கப்பட்டுவிடும்.

எனவேதான், கோழை என்றோ காட்டிக்கொடுப்பவன் என்றோ, வஞ்சகன்என்றோ பிஞ்சு சொத்தை என்றோ, எதைச் சொல்லி என்னை ஏசினாலும் பரவாயில்லை, இயக்கத்துக்கு மட்டும், அதிர்ச்சி தராமலிருந்தால் போதும் என்று கருதினேன்.

பெரியாருக்கு உள்ள அஞ்சாமையும், எதிர் நீச்சுத் தன்மையும், எத்தகைய நிலைமையையும் சமாளிக்கும் திறமையும், எவருடைய விரோதம், குரோதம், பகையாயினும் சரி, எத்தகைய பூசலாயினும் சரி, இவைகளைத் துச்சமெனக் கருதிடும் நெஞ்சழுத்தமும், இயக்கத்தில் நிரம்பி, ததும்பி இருக்கிறது என்று நான் நம்பவில்லை. பெரியாருக்கும் அந்த நம்பிக்கை இல்லாததால்தான், அடிக்கடி அவர் இப்படிப்பட்ட சமயத்தில் என்னையே நம்பி இதிலே ஈடுபடுகிறேன் என்று வெளிப்படையாகவே எடுத்துக் கூறி இருக்கிறார்.

நாம் மேற்கொண்டுள்ள நாட்டு விடுதலை வெற்றிபெறுவதற்கு, இத்தகைய ஒப்பற்ற ஒரு தலைவரின் உள்ளத் திண்மைமட்டும் போதாது, மேலும் மேலும் வலுவு பெற்ற வண்ணம் ஒரு கட்டுப்பாடான இயக்கம் வளர்ந்தாக வேண்டும். அந்த வளர்ச்சியை ஆகஸ்ட்டுக் கெடுத்துவிட்டிருக்கும் — என்பதனால்தான், நான், அதை விரும்பவில்லை.

பெரியார், எப்படிப்பட்ட 'வெறுப்பை'க் காங்கிரஸ்வட்டாரம் வெளிப்படுத்தினாலும் தாங்கிக்கொள்ளக் கூடியவர் — இயக்கம் தாங்கிக் கொள்ளமுடியாது — இது, தம்பி, அங்கு உள்ள சிலருக்குப் பிடிக்கவில்லை—நான் இதைக் கூறும்போது, பெரியாருக்கு நான் ஏதோ ஊறு தேடுவதாகக் கருதுகிறார்கள். அவர்பால் கொண்ட அன்பைக் காட்டிக்கொள்வதற்கு, எளிதான, சுவையுள்ள வழி, உன்னையும் என்னையும் ஏசுவதுதான் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில், பெரியாருடைய திறமையையும் அவர் பெற்றுள்ள செல்வாக்கையும் இம்மி அளவும் நான் குறைத்து மதிப்பிடாததால் தான், அவர் தன் நிலைக்குத் தகுந்த திட்டம் தீட்டும்போது, அது முறையல்ல, இயக்கத்தின் இன்றைய நிலைமைக்குத் தக்கபடியானதும், அதன் எதிர்கால வளர்ச்சியைப் பாதிக்காத முறையிலும் திட்டம் வேண்டும் என்று கேட்கிறேன் — ஓஹோ! நீ யார் கேட்க, என்பார்கள்!—வினயமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களையும் பெரியாருக்குச் சமமானவராகவும், (உள்ளூர, அதைவிட உயர்ந்த திறமையுள்ளவராகவும்) அவருக்கு ஏற்றதத்தனையும் தமக்கும் உடன்பாடே என்று சொல்வதுதான், தாங்களும் பெரியார் அளவுக்கு வளர்ந்து விட்டதாகக் காட்டிக் கொள்வதற்கான வழி என்று கருதுபவர்களாகவும் உள்ளவர்கள்தான், அவர் கூறும் திட்டத்தை அப்படியே ஒப்புக்கொண்டு — அதற்காகச் 'சபாஷ்' பட்டம் பெறுகிறார்கள்.

பெரியாரின் நிலை வேறு! இயக்கத்தின் நிலை வேறு!

பெரியாரால் தாங்கிக்கொள்ளக் கூடியதை எல்லாம் இயக்கமும் தாங்கிக் கொள்ள முடியும் என்பது தப்புக் கணக்கு.

பெரியாருக்கு உள்ள தன்மையும் திறமையும், இயக்கத்தில் உள்ள தங்கள் ஒவ்வொருவருக்கும் அதே அளவிலும் வகையிலும் இருக்கிறது என்று எண்ணிக் கொள்வது, அவரைப் பூரணமாக அறியாததால் ஏற்படும் தவறு; தங்களைப் பற்றி மிகைப் படுத்திக் கணக்குப் போடுவதால் ஏற்படும் தவறுமாகும்.

தம்பி! அண்ணன் தம்பி இருவர்- அண்ணன் ஊர்ப் பெரிய தனக்காரன் — எங்கும் கலியாணம் கார்த்தி என்றதும், பஞ்சாயத்து பாகப் பிரிவினை என்றதும், அண்ணன் தான் செல்வான் — அமளி அடங்கும், ஊர்சீர்ப்படும்.

தம்பி, ஏருண்டு தானுண்டு என்று இருப்பவன்.

தம்பி, அண்ணன் தனக்கேற்றது செய்கிறான், நாம் நமக்கு ஏற்றது செய்கிறோம் என்றுதான் 'தலையணை மந்திரம்' ஏறுகிற வரையில் எண்ணிக் கொண்டிருந்தான். அது தலைக்கேறியதும், ஏன்! நீ மட்டும் தான் ஊர்ப் பெரிய தனம் பார்க்க வேண்டுமா—நான் என்ன நம்ம குடும்பத்து உழவு மாடா? என்று அண்ணனிடம் வம்புக்கு நின்றான். அண்ணன் சூக்ஷமம் தெரிந்து

கொண்டான்—"தம்பி! நீயே இனி, ஊர்ப் பெரிய தனக்காரர் வேலையைப் பார், நான் காடு கழனியைக் கவனித்துக் கொள்கிறேன்—எதற்கும் இரண்டோர் நாள் என்னோடு வா, ஊரில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நான் எப்படி எப்படிக் கவனிக்கிறேன், என்பதைத் தெரிந்து கொள்வாய்" என்று கூறி அழைத்துச் சென்றான்.

அன்று ஒரு சாவு—மகன் கோவெனக் கதறி அழுகிறான், தாய் இறந்ததற்காக.

ஊர்ப் பெரிய தனக்காரனான அண்ணன், அவனைத் தேற்றி, "என்னப்பா செய்யலாம்! எவ்வளவு அருமையான குணம், அம்மாவுக்கு எங்களிடமெல்லாம் எவ்வளவு அன்பு தெரியுமா? அதிகம் சொல்வானேன், அவர்கள் உனக்கு மட்டும் தாய் அல்ல, எனக்கும் தாயாராகத்தான் இருந்தார்கள்" என்றான்.

தம்பி, கேட்டுக்கொண்டான்—பூ! பூ! இவ்வளவுதானா, பெரிய தனக்காரன் வேலை—என்று எண்ணினான்—மறுநாளே பட்டத்துக்கு வந்துவிட்டான்.

எட்டாம் நாள் வேறோரிடத்தில் ஒரு இழவு.

மனைவியைப் பறிகொடுத்த கணவன், மண்ணில் புரண்டு அழுகிறான்—ஐயோ! அவள் போனபிறகு நான் எப்படி வாழ்வேன்—எனக்கேன் சாவு வரக்கூடாது! என் ஆசைக் கனியே! அமுத நிலவே!" என்றெல்லாம் கூறிக் கதறுகிறான். பெரிய தனக்காரனான தம்பி, அருகே சென்றான், அவனை அணைத்துப் பிடித்தபடி, அழாதே அப்பா! அழாதே! என்ன செய்யலாம்! எவ்வளவு நல்லவர்கள், எவ்வளவு அன்பு! அதிகம் சொல்வானேன், அவர்கள் உனக்கு மட்டுமா மனைவியாக இருந்தார்கள், எனக்கும்தான்" என்றான்.

சாவு வீடு, படுகளமாகிவிட்டது.

"அண்ணா அண்ணா! எனக்கு வேண்டவே வேண்டாம் இந்தப் பெரியதனக்கார வேலை" என்று சொன்னான் தம்பி.

கதைதான்—ஆனால் தம்பி! பெரியார் தனது ஆற்றலுக்குத் தகுந்ததைச் செய்யும்போது, அதை நானும், செய்வேன், என்றாலும் முடியும் என்று சொல்லிக் கிளம்புவது, சரியாகாது என்பதற்கான பாடம் இந்தக் கதையில் இருக்கிறது.

இயக்கம் உள்ள நிலையையும், அதன் எதிர்கால வளர்ச்சியையும் கருத்தில் கொண்டுதான் நான் ஆகஸ்ட்டை விரும்பவில்லை, பெரியாரைச் சரியாக மதிப்பிடாததால் அல்ல, மிகமிகச் சரியாக மதிப்பிட்டதால்தான்.

எனவே, ஒரு இயக்கம் நடத்தத் திட்டமிடும் கிளர்ச்சி, அதன் தலைவரின் தனிப்பெருந் தன்மையை மட்டும் அளவுகோலாகக் கொண்டு அமைதல் கூடாது. அந்த இயக்கத்தின் இன்றைய நிலைக்கு ஏற்றதாகவும், எதிர்கால வளர்ச்சியைப் பாதிக்காததாகவும் இருக்க வேண்டும் என்கிறேன். நன்றாக எண்ணிப் பார், தம்பி! நன்றாக — ஒரு முறைக்கு இரு முறை படித்துவிட்டு.

அன்பன்,

அண்ணாதுரை.

8-ம் பக்க தொடர்ச்சி

பிறகு பழையபடி காடுகளிலே கொண்டுபோய் விட்டுவிடுவர். பாம்புக்கு இப்படி ஒரு 'சான்சு' அடிக்கிறது. பாம்புக்கு மட்டுமல்ல, பாம்புப் பிடாரர்களுக்கும் தான்!

பாம்பு பற்றிய பழைய புராணம் தெரிந்த 'பாவையர்' அதை ஆதிசேஷனென்று பூஜிக்கிறார்கள்.

பாம்புக் கடிக்குப் பலியாகி நமது நாட்டிலே மாண்டு போகிறவர்கள் ஏராளம்.

இந்த நிலை, ஒரு 'மாந்தரீக'ருக்கு வாய்ப்பாகிவிட்டது.

எப்படிப்பட்ட பாம்புக் கடியாக இருந்தாலும் இவர் 'பச்சிலை' கொடுத்து குணப்படுத்திவிடுகிறார் என்று மட்டுமல்ல, இவருக்குத் தந்தி கொடுத்துவிட்டால் போதுமாம், இருக்கும் இடத்திலிருந்தே மாந்தரீக சக்தியால், பாம்புக்கடியால் மரணம் நேரிடாதபடி இவர் செய்துவிடுகிறார் என்று விளம்பரம் பிரமாதமாக இருக்கிறது. விஷராஜா என்று விருதே கொடுத்திருக்கிறார்கள்.

சென்னை அமைச்சர் ஷெட்டி அவர்கள், இந்தப் 'போலி'க்கு இடமளிக்க மறுத்ததுடன், விஷராஜா குறித்து கூறப்படுவதைத் தான் நம்பமுடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். படமெடுத்தாடுவர், வைதிகர்கள்! எனினும் பாமரரின் மூடத்தனத்துக்குத் தானும் உடந்தையாக இருக்கக் கூடாது என்று துணிந்துதான் அமைச்சர் ஷெட்டி பேசுகிறார்.

கழுதைகள்!

கொசுக்களுக்கு யோகம் அடித்திருப்பது போலவே, கழுதைகளுக்கும் ஒரு யோகம் அடிக்கலாம் போலத் தெரிகிறது. கழுதைகளின் எண்ணிக்கை வர வரக் குறைந்து கொண்டே போகிறது,



அதைக் கவனிப்பார் இல்லை கொஞ்சக் காலத்துக்குப் பிறகு கழுதைகள் பூண்டே இல்லாமற் போய்விடக்கூடும் போலத் தோன்றுகிறது, ஆகவே, கழுதைகளைப் பராமரித்து அந்த வர்க்கம் அடியோடு அழிந்து விடாமல் பாதுகாக்க வேண்டும் என்று அக்கறையுடன் பேசினார், சிலதிங்களுக்கு முன்பு, நமது மாநில அமைச்சருள் ஒருவர்—பக்தவத்சலனார் என்பது என் நினைவு.

★

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினையைப் புரிந்துகொள்ள மறுக்கும் இந்தப் பிரமுகர்கள், பாட்டாளிகளுக்குப் புத்தி புகட்டுவதாக எண்ணிக்கொண்டு, இந்தக் காரியம் செய்கின்றனர்.

கிராமங்களில், பண்டிகைகளின் போது, 'கூத்து' ஆடப்பழகிக்கொண்டு, ஆடுவர்.

பெரிய தெருப் பிள்ளை பீமன் வேஷம்!

அல்லிக்குளத்துக் கணக்கப் பிள்ளை அர்ஜுனவேஷம்.

பட்டாணிக்கடை பரமசிவம் துரோபதை!

கீரைத்தோட்டத்து வீராசாமி கிருஷ்ணவேஷம்!

இப்படி அந்தக்கிராமமும் சுற்றுவட்டாரமும் பேசிக்கொள்ளும்—பெருங்கூட்டம் சேரும்—மாலை மரியாதைகள் நடத்தப்படும்—'திருஷ்டி' கழிப்பார்கள்-திருவிழாவைவிட, ஊர்முக்யஸ்தர்கள் வேஷம்போட்டு ஆடும்கூத்து கோலாகலமாக இருக்கும்.

ஆனால், கூத்தாடிகள் என்ற கேலிச்சொல்லோ, கூத்தாடுபவர் என்பதால் சமூகத்தில் கிடைக்கும் நாலாந்தர ஐந்தாந்தர இடமோ, வறுமையோ, வாட்டமோ, 'கூத்து' ஆடிய பிரமுகர்களுக்கு இருக்கவே செய்யாது! அவர்கள் எப்போதும் போல, மிராசுதார், கணக்கப்பிள்ளை வியாபாரி, தோட்டக்காரர், எனும் நிலையில்தான் இருப்பர்!

ஒருநாள் வேடிக்கைக்காகவோ, விரதத்துக்காகவோ, பொழுது போக்கவோ, 'கூத்தாடி'விட்டு, கூத்து ஆடுவதையே தொழிலாகக் கொண்டவர்களைக் குத்திப் பேசுவதும், அவர்களின் ஊதியத்தைக் குறைத்து அவர்கள் வயிற்றில் அடிப்பதும், எவ்வளவு அக்ரமமோ, அதுபோலத்தான் ஒரு நாளைக்கு மடிகட்டித்தொடைதட்டிக் கூட்டுக்கோலை எடுத்து குப்பை கூளத்தை அப்புறப்படுத்திவிட்டு, பிறகு, குப்பை கூட்டுவோரின் கூலியைக் குறைக்கும் கொடுமையில் ஈடுபடுவது.

குப்பை கூட்டுவோர் மட்டுமல்ல, உடலுழைப்பால் வாழவேண்டிய நிலையிலுள்ள எந்தப் பாட்டாளியும், தான் செய்யும் வேலை வேறு யாராலும் செய்யமுடியாதது, தனக்கு அந்த வேலையில் உள்ள திறமை வேறு யாருக்கும் கிடையாது என்று கூறி, ஆகையால், எனக்கு அதிக ஊதியம் கொடு என்று கேட்கவில்லை.

என் உழைப்புக் கடினமானது, தரப்படும் ஊதியம் குறைவானது.

குறைவான இந்த ஊதியத்தைக் கொண்டு நான் வாழமுடியாது. ஆகவே, என் கூலியைக் கூட்டிக் கொடுக்கவேண்டும், என்று சராசரி அறிவுள்ள தொழிலாளியும், ஓரளவு பொது அறிவும், பிரச்சினைகளைப் புரிந்துகொள்கிற அறிவும் பெற்ற தொழிலாளர்களாக இருந்தால், என் உழைப்பினால் நடைபெறும் தொழில்மூலம், உங்களுக்கு இவ்வளவு பெருத்த இலாபம் குவிகிறது, நீங்கள் போகபோகத்தில் இருக்கிறீர்கள், நாங்கள் வாழ்க்கையின் அடித்தட்டிலே அழுந்திக் கிடக்கிறோம்; ஆகவே, நாங்களும் மனிதர்களாக வாழவேண்டுமானால் கூலி அதிகப்படுத்தப்படவேண்டும் என்றும் கேட்பர்—கேட்கின்றனர்.

இந்த நியாயத்துக்குக் கட்டுப்பட மறுப்பவர்கள், நாங்களும், குப்பை கூட்டுவோம், கல் உடைப்போம், எங்களாலும் உழுது பயிரிட முடியும், நாங்களும் மரம் அறுப்போம், மண் பிசைவோம், என்று வீம்பு பேசுகிறார்கள்.

இவைகள், யாவரும் செய்யக்கூடிய தொழில்கள் தாம்; சமூகத்தில் பொருளாதார தத்துவம் வளர்ச்சி அடையாத காலத்தில், எல்லோரும் செய்துகொண்டிருந்த வேலைகள் தாம்—மறுப்பார் இல்லை, ஆனால் இந்தத் தொழில்களின் மூலமே வாழ வேண்டியவர்களாகி விட்டவர்களுக்கு, இந்தத் தொழில் வயிறார உணவும், சமுதாயத்தில் மதிப்பான இடமும், தருகிறதா, என்பதுதான் கேள்வி.

மூன்று பேருடைய வேலையை மட்டுமல்ல, நான்கு எருதுகளின் வேலையையும் சேர்த்து அந்த ஒரு டிப்டி மேயர் செய்து சாதித்துக் காட்டினாலும், அவர் கூலிக்காரனல்லவே—துணைத்தலைவர்—ஊர்ப் பிரமுகர்!—அன்று கிடைக்கும் கூலியைக் கொண்டா அவருடைய குடும்பம் உலையில் அரிசி போடப் போகிறது—அதுவும் இல்லையே—அன்று மாலை அவரைக் கண்டு பாராட்டுதலைத் தெரிவிக்க ஊரின் மற்றப் பிரமுகர்கள் கூடுவர்—உபசாரம் நடைபெறும்—நகராட்சி மன்றமே கூடி அவருக்கு வாழ்த்திதழ் தரக்கூடும்.

அந்த மூன்றுபேர்? அவர்கள் தங்கள் குடிசையில்தான் குமுறுவர்! கூலி போதுமானதாக இல்லை என்ற குறைபாடு கொட்டும்.

குப்பை கூட்டினாலும் அவர், டிப்டி மேயர்!!

டிப்டிமேயரே செய்ததுதான் என்றாலும், இவன் குப்பைக்காரன்—எப்போதும், எங்கும், எவருக்கும்!

எனவே ஒரு நாள், டிப்டிமேயர், குப்பை கூட்டிக் காட்டிவிட்டதால், குப்பை கூட்டும் தொழிலுக்கும் புதிய மதிப்பு பிறந்துவிடாது, டிப்டி மேயர் பதவிக்கும் பங்கம் ஏற்பட்டுவிடப் போவதில்லை, டிப்டி மேயரின் செல்வமும்சிதைந்துவிடப் போவதில்லை, குப்பை கூட்டுவோனுடைய கூலியும் உயர்ந்துவிட வழி ஏற்பட்டுவிடாது.

எனினும் இந்தப் பகட்டு பல்வேறு இடங்களில் நடைபெறுகிறது; இதற்குப் பல தத்துவங்களை வேறு துணைக்கு அழைக்கிறார்கள்!!

பாடுபடுவது இழிவு அல்ல, என்ற உயர்ந்த தத்துவத்தை, இப்படிப்பட்ட காரியத்தின் மூலம் நிலைநாட்டுகிறார்களாம்!

உண்மையில் இது நடைபெறுகிறதா? நடைபெற முடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.

பாடுபடுவது இழிவு என்பதல்ல பாட்டாளியின் மனக் குமுறலுக்குக் காரணம், பாட்டாளி என்ற நிலை சமூகத்தில் அவனுக்குத் தாழ்விடத்தைத்தான் தந்திருக்கிறது—அந்தத் தாழ்நிலைமீதுதான் அவனுக்கு வெறுப்பு இருக்கிறதே தவிர, தொழிலின்மீது அல்ல.

சமூகத்தில் 'தாழ்விடம்' 'மேலிடம்' இன்று எதனால் அமைகிறது!

ஒன்று ஜாதியினால்—அது இந்தப் 'புண்யபூமி'யில் மட்டும்.

மற்றொன்று, அவனவனுக்கு அமையும் வாழ்க்கைத் தரத்தினால், தாழ்விடமோ மேலிடமோ, நடு இடமோ அமைகிறது.

ஆயிரக் கணக்கில் வருமானம் உள்ளவன், கற்பூரக் கடைமூலமானாலும் சரி, கருவாட்டுக் கிடங்கு மூலமானாலும் சரி 'மேலிடம்' பெறுகிறான், சமூகத்தில்.

இருபதும் முப்பதும் சம்பாதிப்பவன் 'தாழ்விடம்' பெற்றுத் தத்தளிக்கிறான்.

பிரச்சினை இதுவே தவிர, தொழி

விலே இழிவு இருக்கிறது என்று கருதியா தொழிலாளி பதைக்கிறான்!

பாடுபடுவது இழிவல்ல என்ற பண்பு வளரவேண்டுமானால், பகட்டுக்காக ஒரு நாள் 'கூட்டிக் காட்டுவது' போதாது, பாடுபடுபவன் சமூகத்தில் பஞ்சையாய் பராரியாய், பிறர் கையை எதிர்பார்ப்பவனாய, கடனாளியாகி, நோயாளியாகி நைந்துபடாமல் மரியாதையுடன் வாழத்தக்கதான வாழ்க்கைத்தரம் அவனுக்குக் கிடைக்கும் வழியைக் காணவேண்டும்.

இதற்கான திட்டம் தீட்டத் திறமையோ, மனமோ இல்லாதவர்கள், புன்சிரிப்பைப் பதிய வைத்துக்கொண்டு புதிய மண்வெட்டி கொண்டுவேலைசெய்யும் விதத்தில், புகைப்படம் எடுத்து, பத்திரிகையில் போட்டுக்கொண்டு, கவர்னர் கால்வாய் வெட்டுகிறார்— மந்திரி மண் சுமக்கிறார் — மேயர் குப்பை கூட்டுகிறார்-என்றெல்லாம் தலைப்புகள் கொடுத்து மகிழ்வதால் என்ன பலன் கிடைத்துவிடும்.

பிரமுகர்கள்—இத்தகைய வேலைகளைச் செய்வர், ஒருநாள், இருநாள், அதுஊருக்கு விழா நாள்!! அதே வேலையைச் செய்தே 'ஜீவிக்க' வேண்டியவனுடைய நிலையை இந்த விழா, எந்த வகையில் மாற்றி விடும்!

ஆச்சாரியார் ஏர் உழுதார்!— ஆமாம்—கவர்னர் ஜெனரலாக இருந்தபோது!

அழகான படம் வந்தது, எல்லா இதழ்களிலும்.

சிறிதளவு யூகம் குறைந்திருந்தது, இந்த ஏற்பாட்டை நடத்தி வைத்தபோது. ஆகவேதான், ஆச்சாரியார் காலில் அருமையான செருப்பு இருப்பதும் தெரிந்தது, போட்டோவில்.

சேற்றிலும் சகதியிலும் இறங்கும் உழவன் செருப்பணியமாட்டான்.

சிங்காரத் தோட்டத்தில் உழுது நின்ற திருக்கோலக் காட்சி படமாக்கப்பட்டதால் செருப்பு இருந்தது!

தொலையட்டும், உண்மையாகவே ஆச்சாரியார் உழுதார் என்றே வைத்துக்கொள்வோம் — ஆச்சாரியார் செய்த தொழில்; ஆகவே, அந்த உழவுத் தொழிலில் ஈடுபட்டோர் உயர்ந்தோராகிவிட்டனர் என்று பொருளா, ஆச்சாரியாரே செய்து அந்தத் தொழிலுக்கு 'அந்தஸ்த்தை' உயர்த்திவிட்டதால், அந்தத் தொழிலில் உள்ளவர்களுக்கு மட்டும் ரூபாய்க்கு ஆறு படி சின்னச்சம்பா கிடைக்கும் என்பதா, என்ன பலன் கிடைத்து விட்டது?

ஆச்சாரியார், முதன் முதல் முதலமைச்சரானதே, அப்போதே இந்தத் தொழிலின் மேன்மைத் தத்துவத்தை விளக்கச் சிரமப்பட்டார்.

ஆச்சாரியார், தன் துணிகளைத் தானே துவைத்துக்கொள்கிறார் என்று விளக்கமளித்து, ஆனந்த விகடனில் ஒரு படம் வெளியிட்டனர்—அதில் ஆச்சாரியார், துணி துவைத்துக் கொண்டிருக்கிறார், தன் வீட்டுத் தோட்டப் பக்கத்தில் —போட்டோ எடுக்கிறார்கள்!! எப்படித் தெரிந்தது ஆச்சாரியார் வெளுக்கும் கோலத்தில் இருக்கும் விஷயம்!

போகட்டும், எப்படியோ கேள்விப் பட்டுப் போட்டோக்காரர் வந்து விட்டார்!!

எப்படித் துணி துவைக்கிறார் தெரியுமோ, படத்தில்.......மூக்குக் கண்ணாடி இருக்கிறது, மார்பில் பூணூலும் அப்படியே இருக்கிறது!

ஏதோ துவைக்கச் சொல்லுங்கள் யாரையாவது மூக்குக்கண்ணாடியைக் கழற்றாமல், மார்பிலுள்ள முப்புரியை எடுத்துக் காதிலே சொருகிக்கொள்ளாமல்!

ஆச்சாரியாரால் முடிந்தது— போட்டோவுக்காகத் துணி துவைக்க!!

அவர் துணி வெளுத்ததால்' அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் புதிய நிலையா பிறந்துவிட்டது. இல்லை என்பது மட்டுமல்ல, அவர் இரண்டாம் முறை முதலமைச்சராக இருந்த போது, அவரே அந்தத் தொழிலாளர் மாநாட்டுக்குச் சென்று, துணிவுடன் சொன்னார், உங்களுக்கு எதுக்காகப் படிப்பு? நன்றாக, சுத்தமாக, துணியைக் கிழிக்காமல் வெளுத்துக்கொடுக்கத் தெரிந்து கொள்ளுங்கள், அதுபோதும் — வண்ணார் என்றே பெயர் இருக்கட்டும், தவறில்லை அதனால், என்று பேசிவிட்டு வந்தார். இதைப்பேச, அவரை வரவழைத்துமிருந்தார்கள்!!

பிரமுகர்கள் செய்துகாட்டுவதாலேயே, ஒரு தொழிலுக்கோ, அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கோ புதிதாக ஒரு மதிப்பு கிடைத்துவிடாது—உண்மையான மதிப்புக் கிடைக்கவேண்டுமானால், தொழில்களில் ஈடுபட்டுள்ளோருடைய வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படவேண்டும்—அதற்கான வழிவகை கண்டறிவதில்தான் ஒரு சர்க்காரின் நல்லெண்ணமும் திறமையும் தெரிய முடியுமே தவிர, நாங்களும் செய்துகாட்டுகிறோம்— என்று கூறுவதால் அல்ல, தொழிலுக்கு மதிப்பு உண்டு என்று தத்துவம் பேசுவதாலும் அல்ல, பாடுபடுவது இழிவு அல்ல என்று தட்டிக்கொடுப்பதாலும் அல்ல.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாடியதுடன் பாரதியார் திருப்தி அடையவில்லை, வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம் என்று கூறித்தான் முடிக்கிறார்.

இப்போது நடைபெறும் காரியமோ, வீணில் உண்டுகளித்திருப்போர், உழவும் தொழிலும் மட்டுமல்ல ஊர்க்குப்பையைக் கூட்டுவதாகவும் காட்டிக் கொள்கிறார்கள்.

மூன்று பேர் செய்யும் வேலையை ஒருவர் செய்துகாட்டினார்—ஒருநாள்!

அவரும் அவர்போன்றாரும் நடத்தும் வாழ்க்கையைக் கவனித்துப் பாருங்கள், மூன்றுபேரல்ல, முப்பது, மூன்றுநூறு, மூவாயிரம், தொழிலாளர்களுக்கு ஆகும் செலவு தன்ஒருவருக்கு ஆகும் நிலையில் வாழ்க்கை இருக்கும். மூன்றுக்கு ஒன்று!! மூன்றுஇலட்சம் தொழிலாளர்களின் உழைப்பை உண்டு கொழுக்க ஒரு முதலாளி என்ற அளவுக்கல்லவா நிலைமை வளர்ந்திருக்கிறது அதைமாற்ற மனம்மில்லை, குப்பைகூட்டுகிறாராம், குப்பை!!

★

செருப்புமலை- கொடுமைக் குன்று!

மலைமலையாகக் குவிந்துகிடந்தனவாம் செருப்புகள்! நாஜி வெறியர்கள் கொடுமைக் கூடத்திலே சிக்கி சித்திரவதை செய்யப்பட்டு, மடிந்த சிறார்களின் காற்செருப்புகளாம் இவை. நேரு பண்டிதர் இதைப் பார்த்திருக்கிறார் — பதறிப்போயிருப்பார்! எவர் மனதையும் உருகச் செய்யும் காட்சியல்லவா! நாஜி வெறியரின் போக்கைக் காட்டுகிறது இந்தக் கொடுமைக் குன்று,

2-பக்கத் தொடர்ச்சி

நகை-கண்டெடுத்ததும்-பறிகொடுத்ததும்!

பெரிய புள்ளி! நல்ல கிராக்கி! கொழுத்த இலாபம் கிடைக்கும் என்று எண்ணி, நல்ல நல்ல நகைகளாக எடுத்துத் தந்தான் வியாபாரி. முப்பத்தைந்து வயதான அந்த மாது, அவ்வளவையும் எடுத்துக்கொண்டாள்; பணம் தராமல் ஏமாற்றிவிட்டாள்—பத்தாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நகையாம், ஏமாந்த வியாபாரி, டில்லிவாசி; அந்த மாது வெளிநாட்டுக்காரி, பெயர் மார்ஜோரி ஷென்டன் என்பதாம். போலீசார் அவளைக் கைதுசெய்து, ஆக்ரா சப்ஜெயிலில் காவலில் வைத்தனர். நகைகளில் பெரும்பாலானவை அவளிடமிருந்து கைப்பற்றப்பட்டன. வழக்குத் தொடர ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், அந்த மாது ஆக்ராஜெயிலில் மரணமடைந்துவிட்டாள். போலீசுக்குப் புதிதாக ஒரு வேலை ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

மார்ஜோரி போன்றோரின் விஷயமாகப் படிக்கும்போது கோபம் பிறக்கிறது.

இதோ இந்தச் 'சேதி' நமக்குக் கண்ணீர் பிறக்கச் செய்கிறது பாருங்கள்—துக்கம் பிய்ப்பதால் அல்ல, பெருமிதம் பிறப்பதால் ஏற்படும் கண்ணீர்.

அவன் ஒரு ஏழை, உழைப்பாளி! ஆயுள் பூராவும் பாடுபட்டாலும் மொத்தமாக ஆயிரம் ரூபாய் அவனிடம் சேருவது முடியாது! அப்படிப்பட்டவனுக்கு, 13000 ரூபாய் பெறுமானமுள்ள வைர நெக்லெஸ் கிடைத்தது. ஆயுட்காலம் பூராவும் ஆனந்தமாக வாழலாம், வேலைவெட்டி செய்யாமல், விலா எலும்பு முறித்துக்கொள்ளாமல், என்ற சபலம்தானே பலருக்கு ஏற்படும். மார்ஜோரி அல்ல அவன்! செயத் உசேன் எனும் அந்த உத்தமன், பஸ் கண்டக்டர். யாரோ பஸ்ஸில் வந்தவர்கள் தவற விட்டுவிட்டார்கள் அந்த வைர மாலையை. செயத் உசேன் சபலத்துக்கு இடமளிக்கவில்லை. நேரே அதைத் தன் தொழில் நிலையத்தில், கொண்டு சேர்த்தான்-அவர்கள் போலீசுக்குத் தகவல் தந்தனர்—நகையைப் பறிகொடுத்தவர் அதற்குள் போலீசில் புகார் செய்திருந்ததால், வைரமாலை அவருக்குத் தரப்பட்டது.

பாட்டாளியின் அந்தப் பண்பட்ட மனதுடன், பகற்கொள்ளை அடிக்கும் படாடோபக்காரருடைய மனப்போக்கை ஒப்பிடும்போது, கண்களில் நீர் துளிக்காமலிருக்க முடியுமா! நேர்மை உணர்ச்சியுடன் இருந்த செயத் உசேன் போன்றோருக்கு, மக்கள் மன்றங்களும், சர்க்காரும், பாராட்டுதலைத் தெரிவிக்க வேண்டும், அத்தகையவர்களின் தொகை பெருகுவதற்கும், பண்பு வளருவதற்கும்.

ஊசி....ப் போச்சே!

ஆச்சாரியார் நடத்திவரும் ஊசி குத்துவதை எதிர்க்கும் போர், ஊசிப் போச்சு, என்றே கூறிவிடலாம் போலிருக்கிறது. பலராஜ்யங்களிலும், பி.சி.ஜி. ஊசி குத்துவதற்காக(1954-55) ஒரு ஆண்டில் 34 இலட்சம் ரூபாய் சர்க்கார் செலவிட்டிருக்கிறது. இவ்வளவும் செலவானபிறகு, ஆச்சாரியாரின் எதிர்ப்பு வெற்றி தந்திருக்கிறது என்று எப்படிக் கூறமுடியும். ஆச்சாரியாரின் எதிர்ப்பு இயக்கம் வெற்றிதரவில்லை என்று கூறுவதை அவருடைய 'பக்தர்கள்' விரும்பமாட்டார்கள்! வெற்றிதான் கிடைத்திருக்கிறது எமது ஆச்சாரியாருக்கு. அவருடைய எதிர்ப்புக்காக, ஊசிகுத்துவது நிறுத்தப்படவில்லை என்றபோதிலும், ஊசி குத்தும்போதெல்லாம் ஆச்சாரியாரைப்பற்றி எண்ணம் வருகிறதல்லவா!! அது வெற்றி அல்லவா!!—என்று பக்தர்கள் கேட்பர்.

நிலக்கரி-இங்கும்-அங்கும்!

நெய்வேலியில் பூமிக்கடியில் பெருஞ்செல்வம் புதைபட்டுக் கிடக்கிறது—பழுப்புநிற நிலக்கரிச் சுரங்கம், தோண்டுவாரற்றுத் தூங்குகிறது—அதனை வெட்டி எடுத்துப் பயன்படுத்தினால், இங்கு உள்ள தரித்திரத்தில் பாதி அளவு ஒழிந்துபடும் என்று திராவிட இயக்கம் பல ஆண்டுகளாகப் பன்னிப் பன்னி எடுத்துரைத்தபிறகே பொதுமக்களுக்கு, இப்படி ஒரு செல்வம் இருக்கும் உண்மை தெரியவந்தது. தென்ஆற்காடு மாவட்டம் என்றால், மணிலாக் கொட்டைக்குக் களஞ்சியம் என்றுமட்டுமே கருதிக்கொண்டிருந்த மக்களெல்லாம், தொழிற்சாலைகள் பல அந்த மாவட்டத்தில்மட்டுமல்ல, தென்னாடு முழுவதுமே அமைவதற்கான வகைதரும் அளவில், நெய்வேலியில் நிலக்கரி இருப்பதை இப்போதுதான் உணரத் தலைப்பட்டார்கள்.

இங்கு தொழில்வளம் பெருகவேண்டும் என்ற அக்கரை வடநாட்டு அதிபர்களுக்கு ஏன் ஏற்படப்போகிறது; எனவே, நெய்வேலி ஏட்டளவில் இருந்துவந்தது. கிளர்ச்சி போன்றதோர் நிலைமை வளருவது கண்ட பிறகே, வேண்டா வெறுப்புடன், பரீட்சார்த்தமாகத் தோண்டிப் பார்க்கிறோம் என்று சர்க்கார் முன்வந்தனர்-இன்னமும் 'பரீட்சை' முடியவில்லை—மேலும் பல இலட்சங்கள் செலவிட்ட பிறகுதான் பிள்ளை பிழைக்குமா இல்லையா என்பதே தெரியுமாம். இங்கு இந்த இலட்சணம்.

வடக்கே நேருபண்டிதரின் ஜென்ம பூமியான காஷ்மீரில், நிலக்கரி கிடைக்கிறதாம்! அதை வெட்டி எடுப்பதற்கான வேலைகள் அங்கு மளமள வென்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

நெய்வேலியில் ஆமையாக இருக்கும் சர்க்கார் நிர்வாக யந்திரம், காஷ்மீரில் எவ்வளவு சுறுசுறுப்புக் காட்டுகிறது என்று பாருங்கள்!!

மேலும் ஒரு 40 இலட்சம் செலவிட்டு, ஊற்றுத் தண்ணீரை வெளியே இறைத்துவிட்டு, பிறகுதான் நிலக்கரியைத் தொடப்போகிறார்கள், நெய்வேலியில்! வெளிநாட்டு நிபுணர்கள் ஒவ்வொருவரும், ஆச்சரியப்படுகிறார்கள், நெய்வேலியின் செல்வம் கண்டு. இதைப் பயன்படுத்த ஒரு அக்கரையுள்ள சர்க்கார் வேண்டுமே!!

யோகம்-எங்கும்!

இந்திய பூபாகத்தின் எஜமானர்களாக வடநாட்டார் இருப்பதால், அவர்கள் எங்கு சென்றாலும் சீரும் சிறப்பும் பெற முடிகிறது; செல்வமும் செல்வாக்கும் கிடைக்கிறது; பதவியும் பவிசும் தேடி வந்து அடைகிறது; வெள்ளைக்காரர்போலவே ஆதிக்கம் புரிய முடிகிறது. சான்று தேடுவோர், யுகாண்டாவில் இப்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள மந்திரி சபையைக் காணவேண்டுகிறோம். ஆகஸ்ட் 15ந் தேதி அங்கு புதிய மந்திரி சபை அமைகிறது! ஆகஸ்ட்டு 15, வெள்ளைக்காரன் இங்கிருந்து வெளி ஏறிய நாளல்லவா—அதே நாளில், ஆப்பிரிக்க பூபாகத்தில், ஆப்பிரிக்கரை ஆள ஒரு வடநாடடவர், இந்தியர் என்ற விருதுடன் அமைச்சராகப் போகிறார். அன்னியருடைய ஆதிக்கத்தை ஒழிக்க அண்ணல் காந்தியாரின் அறப்போரைத் துணை கொண்டவர்கள், இப்போது ஆப்பிரிக்காவில் வெள்ளையர் ஆகிவருகின்றனர். அமார்நாத் என்பவர், அமைச்சராகிறார்! இவர் ஒரு வக்கீல். ஆப்பிரிக்கா முழுவதும் இப்போது பெரியதோர் கொந்தளிப்பில் இருக்கிறது-வெள்ளையர் ஆதிக்கத்திலிருந்து விடுபட ஆப்பிரிக்காவில் கிளர்ச்சித் தீ பல்வேறு இடங்களில் கொழுந்துவிட்டெரிகிறது. அதேபோது, இந்தியர் தங்கள் ஆதிக்கத்தைப் புகுத்துகிறார்கள் என்று ஆப்பிரிக்கர் கடுங்கோபம் கொண்டுள்ளனர். அடிக்கடி கலாம் விளைகிறது. பெய்ரோபி பகுதியில் சில இந்தியர்கள் கொலை செய்யப்பட்டதுமுண்டு. வியாபாரத் துறையிலும்

REGD No. **4642** திராவிடநாடு போன் நெ. 15.

தொழில் துறையிலும் இந்தியர் ஆதிக்கம் செய்வதை ஆப்பிரிக்கர் அறவே வெறுக்கின்றனர். தாங்கள் சுரண்டப்படுவதாக ஆப்பிரிக்கர்கள் கண்டனக் குரல் எழுப்புகின்றனர்.

"ஆப்பிரிக்காவில் ரயில்வேக்களை அமைத்தவர்கள் நாங்களே! பஞ்சாலைகளை அமைத்தவர்கள் நாங்களே! ஆப்ரிக்காவின் அபிவிருத்திக்காக அரும்பாடுபட்டவர்கள் இந்தியர்களே. ஆப்பிரிக்கரை இந்தியர் சுரண்டுகிறார்கள் என்று கூறுவது அபத்தம்" என்று சர்ச்சில் பாஷையில் பேசுகிறார், சர்தார் ஜில் என்பவர், நெய்ரோபிவாசி, பம்பாயில், ஒரு விருந்து வைபவத்தின்போது.

யுகண்டாவில், ஒரு இந்தியர் அமைச்சராகி இருப்பது, நிச்சயமாக ஆப்பிரிக்கரின் ஆத்திரத்தை மேலும் கிளறிவிடத்தான் பயன்படும். இந்திய பூபாகத்தின் ஆளவந்தார்களாகி விட்டதால், வடநாட்டாருக்கு எங்கும் யோகம் அடிக்கிறது; எந்தத் துறையிலும் ஆதிக்கம் கிடைக்கிறது.

இந்தி-படையில்!

இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் கிளர்ச்சிகளும், கிளர்ச்சிகளை ஒடுக்க பெருந் தலைவர்கள் தரும் வாக்குறுதிகளும் ஒன்றை ஒன்று மிஞ்சும் வேகத்தில் இருந்து வருகிறது, ஆனால் இந்தியை நுழைக்கும் காரியம் துணிவுடன் பல துறைகளிலே நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. தியாகி எனும் மத்திய சர்க்கார் மந்திரி ஜூலை 27ல், கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில், பட்டாளத்தில் இப்போது இருந்துவரும் ஆங்கில வார்த்தைகளை நீக்கிவிட்டு, இந்தி பயன் படுத்துவதற்கான யோசனைகள் பலரிடமிருந்து கிடைத்திருக்கிறது, சில இந்தி வார்த்தைகள் இப்போது, கவாத்துப் பழகும்போது உபயோகிக்கப்பட்டும் வருகிறது என்று லோக சபையில் கூறி இருக்கிறார். கேரளமாயினும் கன்னடமாயினும், ஆந்திரமாயினும், தமிழகமாயினும், அனைவரும் பட்டாளத்திலே பழகிக்கொள்ள வேண்டியது இந்திதானாம்!!

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.